dt ?

மே. சங்கரன்

வேத நிதானமும் கால வர்த்தையும்

பாகம் – II

201 - 489 பக்கங்கள்

இரத்த காசத்துக்கு தாம்பிர பற்பம்.

வங்கம் பலம்-4 கொண்டுவந்து உருக்கி தாழிமடல் சாத்திரப்படி காடியிலும் வகைக்கு யெழுதரம் சாய்த்து யெடுக்கவும் வெள்ளை தட்டிக் கொண்டு ரூபாபன்ரு தாம்பரத்தைத் திவக்கக் காய்ச்சி யெடுத்து புளியிலைச் சாத்திலும் வேப்பிலைச் சாத்திலும் வகைக்கு யெழுதரம் சாய்த்-தெடுக்கச் சுத்தியாம்.

நெல்லிக்காய் கெந்தகம் பலம்-4 பொடி செய்து ஒரு மொந்தையில் வங்க வில்லையை வைத்து அதுமேலே கெந்தப் பொடியை பாதி பரப்பி அதன்மேலே தாம்பரத் தட்டைப் பரப்பி அதன்மேலே கெந்தகப் பொடியாலே மூடி மொந்தைக்கு வில்லை போட்டு மூடி யெழு சீலை மண் யேழு நாட்கள் செய்து காய வைத்து பெரிய பள்ளம் வெட்டி யணைத்து அந்தப் பள்ளத்தில் ஆட்டெருவும் விறகுக் கட்டைகளும் வறாட்டிகளுமா யடுக்கி அதற்குள்ளே இந்த மொந்தையை வைத்து கைப்புடமாக அடுக்கி ~~[illegible]~~ புடம் ~~[illegible]~~ போடவும். அஞ்சுநாட்கள் பொருத்தெடுக்க தாம்பிரம் வெண்மையான பற்பமாம்.

வங்கம் வேறே பற்பமாம். யாதொன்றை
வெவ்வேறாய் எடுத்து வைத்துக் கொண்டு-
யிந்த தாம்பிர பற்பம் வேளைக்கொரு
பணவிடை தேனிலாவது பசுவின் நெய்-
-யிலாவது சர்க்கரையிலாவது கொடுத்துவந்
தீரும் வியாதிகள் – க்ஷயம், கிருமிகள்,
ரத்தகாசம், ரத்தபித்தம், சுரம்,
அக்கினிமாந்தம், மார்க்ஷோதை, இன்மம்
(குன்மம்) சர்வ ரோகங்களும் தீரும்.

வங்க பற்பம் வேளைக்கொரு
பணவிடை தேனிலாவது, சர்க்கரையி-
லாவது, பசுவின் நெய்யிலாவது கொடுத்து
-வர மேக மிருபத் தொன்றுந் தீரும்.
இதுக்குப் பத்தியம் – கவிச்சு, புளிப்பு
தவிர்க்கவும்.

முற்றும்.

தாளக பற்பம்

பத்திர தாளகம் நான்கு நாட்கள்
பசுவின் கோமியத்தி லூறப் போட்டு
பிறகு சுண்ணாம்பு தெளித்து கரைத்து
அதிலே தோளா யெந்திரமாகக் கட்டி
13. ஒரு சாமம் எரித்த பிறகு ~~கத்தாழைக்~~ சிறுசெருப்படை சாறு-
விட்டு

ஏழுநாட்கள் மத்தித்த பிறகு பூசனிக்காய்ச்
சாற்றின், பலாசுசாற்றின் எவ்வேழு
நாட்கள் மத்தித்த பிறகு வில்லையாய்
தட்டி உலர்த்தி அப்பிரகத் தகட்டில்
வில்லையை வைத்து மேலும் அப்பிரகத்
தகடு கொண்டு மூடி பலாசத் சாம்பலின்
நடுவே வைத்து மேலுஞ் சாம்பலிலிட்டு
மூடி ஒருசட்டியின் வைத்து மேலுஞ்
சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து
ஆறு விறகு அறுபது நாழிகை எரிக்க
பற்பமாம். அந்தபற்பம் பஞ்சலவணமுங்
கட்டும். எழுமிச்சம் பழச்சாற்றில்
தடவிப் போடக் கட்டும். நவச்சாரம்
பாசாணமுங் கட்டும். நவபாசாணமுங்
கட்டும். கெந்தகமுங் கட்டும். கட்டின
கெந்தகம்-10, கந்தகம்-1 இப்பாக சேர்க்க
தயனமாம்.

எல்லா ரோகத்துக்குங் காந்தபற்பம்

காந்தத்தைகோமூத்திரத்தில் சுத்தி பண்ணிக்
கொண்டு நாவல்பட்டைச் சாற்றின் கற்றா-
-ழுஞ் சாற்றின் கையாந்தகரைச் சாற்றின்

கடுக்காய், நெல்லிப் பருப்பு யாந்தக் கிராயத்-
-தின் வகைக்கொரு புடம் [விழுக்காடு
புடத்துக்கு] புடமிட்டதை அரைத்து மீண்டும் புடம் போடவும்
எல்லா ரோகத்துக்குமாம்.

பிள்ளையில்லாப் பெண்மணிகளுக்கு வெள்ளியப் பற்பம்.

வெள்ளியம் - விராகனிடை - 2 நாகத்
தாளாக்கிக் கொண்டு அந்தத் தாளில்
கற்பூரம் - விராகனிடை - 2,
பொட்டிலுப்பு - விராகனிடை - 2, தடவி
போட்டு கல்வத்தில் விட்டு நன்றாக பொடி
செய்து எடுத்தொரு அகலில் வைத்து
மேலகல் கொண்டு மூடி சீலைமண்
செய்து ஒரு முட்டை புடம் போட்டு
ஆறின பிறகு பற்பத்தை எடுத்து வைத்துக்
கொண்டு பெண்பிள்ளைகள் வீடு
தூரமாகிய நாலாந்நாள் காலையிலே கால்படி
பசுவின்பால் காய்ச்சி அதிலொரு பணவிடை
பற்பம் போட்டு சாப்பிடக் கொடுக்கவும்.
இப்படி அடுத்து மூன்று காலமே (மூன்றுநாட்கள்
காலமே) சாப்பிடவும். நாலாநாள்
காலையிலே ஒரு ரெசத்தாளிப் பழத்துக்குள்ளே

பணவிடை பற்பம் வைத்துச் சாப்பிடக் கொடுக்கவும். பத்தியம் - கைப்பு, புளிப்பு அ. தவிர்க்கவும் தள்ளவும்..

பித்த சோகை பாண்டு ரோகத்துக்கு

நாலு கழஞ்சு அரப்பொடியும்
நன்ன கெந்தக மிருகழஞ்சு
சாலடு சார மொருகழஞ்சு
சேர்நற் குமரி சாறுவார்த்து
ஏலாங் கிழவா நம்பிரன்னைப்
பிசைய வரைத்தங் கத்துவாங்கி
சாலத் துள்ளே தப்பவைத்தான்
தழலா லெரியுங் கண்டதே.

கண்டீர் இன்னம் பீலிகையுஞ்
கருக மாறித்தப் பாண்டுருவும்
பண்டே பொன்னா மேனியும்போய்
பாடமா புருஷன் வடிவாகும்
கண்டே சொன்னேன் வித்தனையுஞ்
கருதிக் கொள்வீர் கையாலே

இதுக்கு ஒருகழஞ்சு காந்தங் கூட்டிக் கொள்ளவும். இது வெய்யலிலே வைக்க பற்பமாகி விடும். ஒரு பொழுதுக்கு (வேளைக்கு) கான் மா அளவு நெய்யில் சாப்பிடவும்,

---

அய அக்கினி விபரம்

இரசம் - பலம் - 1, நாபி - பலம் - 2
காந்தம் - பலம் - 6, கெந்தகம் - பலம் - 6
லோகம் - பலம் - 10, இவைகளைச் சுத்தி
செய்து கற்றாழைச் சாறு விட்டு ஒரு சாம-
அரைத்து அடையாகத் தட்டி தலைத்திவெளியில் கஜப்புடத்-
-திலிட்டு வெய்யலில் காய வைத்து
நன்றாய் காய்ந்தபின் எடுத்து மெழுகு-
அரைத்து வைத்துக் கொண்டு குன்றி-
மிடை பிரமாணம் தேனில் சாப்பிடவும்
இப்படி அந்தி சந்தி எட்டு நாட்கள்
சாப்பிடவும். அஷ்ட குன்மம், மகோ-
-தரம், பாண்டு பிணிகள் தீரும்.

அய அக்கினி

அரப்பொடி பலம் - 2, காந்தம் - பலம் - 1
கெந்தகம் - பலம் - ௭, இரசம் - பலம் - ௭,
மனோசிலை - பலம் - வ, சாத்திர பேதி -
பலம் - ஒ இம்பிச் சாறு விட்டு ஒரு சாம
அரைத்துப் பின்பு கலத்திலிட்டு வெய்ய-
-லில் வைத்து உலர்ந்தபின் எடுத்து
வைத்துக் கொண்டு தேனில் கொள்ளவும்
பாண்டு, வீக்கம் சோகைத்துக் குணம்.
சுரத்து மிடலாம், கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

வெள்ளைக்கு வங்க பற்பம்

வெள்ளீயம் - பலம் - 1 புண்ணாக்கு
ரெண்டு கட்டி வாங்கி ஒரு கட்டி
நடுப்புறம் பள்ளம் கோலி யிந்த ஈயத்தை
வைத்து மேலொரு கட்டி மூடி கோணி-
14. -யில் அடுட்டி சீலைமண் செய்து உலர
வைத்து இருபதுகை வறாட்டியில்
புடம் போட்டு அடுத்தநாள் ~~காலை~~ காலையில்
யெடுக்க சோளப்பொரி போலிருக்கும்
அதையெடுத்து தாள் ~~பண்ணை~~ ஒசைக்க வைத்துக்
கொண்டு பணவிடை பற்பம் காலைத்
தெளிவில் போட்டுக் கொடுக்கவும்.
இப்படி ~~ஏழு~~ ஏழு நாட்கள் கொடுக்க
வெள்ளை ~~விழுகிறது நிற்கும்~~. நீங்கும்

வேறு - பேயன் வாழைப் பழத்திலொரு-
-துளி அத்திப்பால் நடுவே விட்டு மூடி
அந்த நாட்கள் கொடுக்க வெள்ளை
~~விழுகிறது நிற்கும்~~. நீங்கும்.

பிரதாப அக்கினி குமாரன் பற்பம்

இரசம், கெந்தகம், வெண்காரம்,
வசனாவி, வங்க பற்பம், தாம்பிர பற்பம்,

மிளகு, அக்கு, சத்திரயவச்சாரம், சத்திச்
சாரம், பஞ்சலவணம் யிவையெல்லாஞ்
அத்திப்பண்ணி சமன் கூட்டி கல்வத்தில்
இட்டு
போட்டு யிஞ்சிச்சாறு ~~விட்டு~~ மூன்று-
நாட்களரைத்து ஆறவைத்து காசிக்
குப்பியிலடைத்து சீலைமண் செய்து
காயவைத்து பெரிய பானையின் அரை
விரல் கனம் மணலடுத்து அதின்மேலே
குப்பியை வைத்து மறுகால் குப்பிச்
சரியாய் மணல் போட்டு குப்பிவாய்
தெரியவிட்டு யெடுத்தடுப்பில் வைத்து
தீபாக்கினியாக எட்டுசாமமெரித்து
சுவாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து
குப்பிக்குள் மருந்தையெல்லாம் வாங்கி
நிறுத்துக் கொண்டு யிந்த யிடைக்கு
பத்திலொரு பங்கு நாபி கூட்டிப்
போட்டு அரைத்து வைத்துக் கொண்டு
தக்க அனுபானத்தில் வேளைக்கு
குன்றிமணி பிரமாணம் கொடுத்து வர
அஜீரண தோஷம், சுரம், சன்னி பதிமூன்று
வகையும் விஷதோஷம் எழுவகையும்
தீரும்.

உத்தம அக்கினி குமாரக பற்பம்

சுத்தி செய்த ரசம், அப்பிரக பற்பம், காந்த பற்பம், லோக பற்பம், ருத்திர நாபி யிவைகள் சமபாகம் கல்வத்தில் போட்டு அமுரைசப் பத்தில் வார்த்து மூன்று நாட்களரைத்து குண்டுமணி பிரமாணம்

அ. மாத்திரை திரட்டி நிழலாக உலர்த்திக் காசுக்குப்பியி லடைத்து எருசீலை மண் செய்து காய வைத்து இரண்டு சட்டியில் மணலை யடுத்தி அதுக்குள்ளே குப்பியை புதைத்து குப்பிவாய் தெரிய விட்டு சட்டியை யெடுத்து அடுப்பில் வைத்து கமலாக்கினியாக அரு சாம மெரித்து ஆறுக சீதளமாக ஆறவிட்டெடுத்து கல்வத்தில் போட்டு அரைத்து வைத்துக் கொண்டு அதன் அனுபானத்தினும் உளுந்து பிரமாண மெடுத்து வைத்துக் கொடுத்துவர சன்னி பதிமூன்று வகையும் அஸ்திர ஜுரம், விஷபு- விஷமும், தொஜங்களு மிழைப்பு சளிவரந் தீரும். இதுதீர இச்சாபத்தியமாக வரவும் நாகத்- -துக்கு சக்கரை பாணக்கம், கருப்பஞ் சாறு, இளநீர் இவைகள் கொடுத்து வரவும்.

பொதநாகிரிம்ம பற்பம்

துசணாபி, ரசம், கெந்தகம், காந்த பற்பம், அப்பிரக பற்பம், தாம்பிர பற்பம், சொர்ண பற்பம்

யிவைகளை அத்தி பண்ணிக்கொண்டு வகைக்கு பலம் -1 கூட்டி கல்வத்தில் போட்டு அரைக்கும் போது வெள்ளைச்சாறு, வேளைச்சாற்றிலும் சீந்திற்கொடிச் சாற்றிலும் சித்திர மூலச்சாற்றி-லும் வகைக்கொருநாள் வார்த்தரைத்து வாரியெடுத்து வச்சிர மூசையில் வைத்து சீலைமண் செய்து வாலுகா யெந்திரத்தில் வைத்து ரெண்டு சாமம் காலாக்கினியாக யெரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து மருந்தையெல்லாம் வாங்கி மூங்கிற் குழாயில் -லடைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு உளுந்து பிரமாணமெடுத்து அநுபான ~~விசே~~ விசேடத்தி லிட்டு வரத் தீரும் வியாதி - ஊருஸ்தம்ப வாதம், ~~சித்த~~ வாதம், காத்திரஸ்-தம்ப வாதம், ஆமவாதம், தனுர் வாதம், பக்ஷகா வாதம், நடுக்கு வாதம், சருவாங்க-வாதம், சிப்பத்த வாதம், உன்மாத வாதம் வாதமெண்பத்தினாலு வகையும் தீரும்.

காந்த பற்பம்

ஊசிக்காந்தம் வேண்டிய மட்டுங் கொண்டு அகலில் வைத்து மேலகல் கொண்டு மூடி ஒரு சீலைமண் செய்து காயவைத்து கெச-புடத்தில் வைத்து எரிந்து தணிந்து வரும்
15 போது முட்டைப் பிரித்து அகலைக் குத்தித்-திறந்து

இருகொண்டு பொடித்தெடுத்து சாடியில் கொட்-
-டவும். இப்படி மூன்றுத்தரம் சைபுடம்
போட்டு யெடுத்துச் சாடியில் போட்டெடுக்கச்
சுத்தியாம். இந்தக் காந்தத்தை யெடுத்து
கல்வத்தில் போட்டரைத்து வைத்துக் கொண்டு
2 குண்டமணி வேதியத்தில் ரெண்டரை
வைத்துக் கொடுத்து வரத் தீரும் வியாதி-
அக்கினி மாந்தம், அசீரணம், சரீர வாதங்க-
-ளும் கொடிய ரோகங்களும் பாண்டு ரோகங்-
-களும் காமாலை ரோகங்களும் நீக்கட்டு
வியாதிகளும் இன்ம ரோகங்களும் மார்புவலி
நோவும் இரத்தரோகம் யிவையெல்லாந்
தீரும். அக்கினியுண்டாகும். தேகபுஷ்டியுண்டாம்

—

இந்த காந்தபற்பத்தை செந்தூரம் பண்ணும்படி.
இந்த பற்பத்தை கல்வத்தில் போட்டு கற்றாழை-
மடல் சாத்திரம் கரிசிலாங்கண்ணிச் சாத்-
-திரம் ஆலம் விழுதுச் சாத்திரம் இப்படி
வகைக்கு ரெண்டு நாளரைத்து வில்லைதட்டி
காய வைத்து அகலில் வைத்து மேலகல்
கொண்டு மூடி மூசீலை மண் செய்து
கஜபுடம் போட்டு ஆறின சீதமாயி
ஆறவிட்டெடுக்கவும். இப்படி மூன்று
சாத்திரம் மூணுபுடம் போட்டெடுக்கச் செந்தூரமாம்.

அனுபான விசேஷத்தில் வைத்துக் கொடுத்து-
-வர சர்வ சுரங்களும் சர்வ ரோகங்களும்
தீரும்.

ஊசிக்காந்த பற்பம்

ஊசிக்காந்தம் வேண்டிய மட்டுங்
கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாற்றிலும்
காடியிலும் புளிச்ச மோரிலும் புளியிலைச்
சாற்றிலும் - இந்தச் சாறுகளிலே வகைக்-
கொரு சாமம் ஊற வைத்து எடுக்க
சுத்தியாம். இப்படி சுத்தி பண்ணின
காந்தக் கல்லை யெடுத்து அகலில் வைத்து
மேலகல் கொண்டு மூடி சீலை மண்
செய்து காய வைத்து கஜ புடம் போட்டு
அ. சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்துக்
கல்வத்தில் போட்டு அரைத்து வைத்துக்
கொண்டு இந்த பற்பம் வேளைக்கு பண-
விடை அனுபான விசேஷத்தில் வைத்துத்
தேனில் கொடுத்து வரத் தீரும் வியாதி -
சர்வ சுரங்களும் சர்வ ரோகங்களும்
நீர்க்கட்டு ரோகங்களும் மகோதரம்,
அக்கினி மாந்தம், அசீரணம், க்ஷயரோகம்,
மேகரோகம், இத்தகாசம் யிவையென்ன
தீரும்.

இரணங்களுக்கு யாங்கிலிக பற்பம்.

(பொடி)
யாங்கிலிகம் வேண்டிய மட்டும் ~~போட்டு~~
செய்து கொண்டு பெரிய சட்டியின் உள்ளே
பரப்பி அதின் மேல் ~~பேரின்~~ தாழ ~~க்கி~~மாறு வைத்திலை-
-யைப் பரப்பி அதின் மேல் ~~பேரின்~~ விளக்கைப்
பொடியைப் பரப்பி மறுபடி ~~இதின் பேரின்~~ மேல்
தும் ~~க்கி~~மாறு வைத்திலையைப் பரப்பி அதின்-
மேல் ~~பேரின்~~ விளக்கைப் பொடியைப் பரப்பி ~~இப்படி~~
நாலு (ஐ) தையாக ~~பதங்களாய்~~ அந்த தையாக ~~பதங்களாய்~~
பரப்பி, ~~இப்படி~~ பரப்பி மேல் சட்டி கொண்டு
மூடி அந்த சீலை மண் செய்து காய-
-வைத்தெடுத்து அடுப்பில் வைத்து மெதுவா-
-யொரு சாம மெரித்து ஆறங்க சீதளமாக
ஆறவிட்டு மெதுவாய் சட்டியைப்
பிரித்து மேல் சட்டியை அசையாமல்
எடுக்க சட்டியில் புஷ்பம் (பற்பம்) பத்தியிருக்-
-கும். அந்த பஸ்பமெல்லாம் வாங்கி
யெடுத்து வைத்துக் கொண்டு, இதுக்கு
அநுபானம் - திப்பிலி, திப்பிலி மூலம்,
சுவாங்கம் பிளைகள் சமன் கூட்டல்
பொடி செய்து வைத்துக்கொண்டு மூடை
பிடைல் பொடியும் பணவிடை பஸ்பமும்

இந்த இரண்டு வகையுமாகக் கூட்டி
தேன்விட்டரைத்து உண்டையாகத் திரட்டி
அண்ணாக்குத் தட்டாமல் புழுங்கி வரவும் -
இதனால் தீரும் வியாதி - வெகு நாள் கடுசபட்ட
ரணங்கள், புண் சேத்தடைகள், சீலைக்
கட்டுகள் யிவையெல்லாந் தீரும் இதுக்குப்
பத்தியம் - உப்பு, புளிப்பு, புகை யிவைகள்
16. தவிர்க்கவும். மற்ற வஸ்துகள் பத்திய
கிரமத்தோடே கூட்டி வரவும்.

கிராணிக் கழிச்சலுக்கு அபின் பற்பம்

நல்ல சாதி அபின் மருந்து - பலம்-4 கொண்டு
வந்து பொடி செய்து வெள்ளைப் பீங்கான்
குண்டு பீங்கான் கெட்டியாய் யெடுத்து
இந்த பீங்கானில் அபின் மருந்தை வைத்து
இந்த மருந்துக்கு நாலு விரற்கடை உயரம்
நிற்க பிராந்தி, சாராயம் வார்த்து இதற்குப்
பெரிய சட்டியில் நாலு விரல் கனம் மணல்
போட்டு பரப்பி அந்தப் பீங்கானை அதின்-
மேலே வைத்து சட்டியோடே எடுத்து
அடுப்பில் வைத்து மெதுவா யெரித்து வரவும்
இந்த மருந்து கொதித்து குழம்பா யிறுகி வரும்
போது யிறக்கி சாங்க சீதளமாக ஆறவிட்டுக்

பீரங்காணோடே யிறுக்கிக் கொண்டிருக்கும் இந்த பீரங்காணை உடைத்தெடுத்து வைத்துக் கொண்டு யிதுக்கு அனுபானம் சாதிக்காய், லவங்கம், திப்பிலி, மிளகு யிவைகளை சமன் கூட்டிப் பொடிசெய்து வைத்துக் கொண்டு யிந்தப் பொடி (மாடை ~~[illegible]~~ யிடை) அபினிபற்பம் பணவிடையுமாக வைத்துப் பொடிசெய்து தேனோடே யாவது சர்க்கரையாவது வைத்துக் கொடுத்துவரத் தீரும் வியாதி - கழிச்சல் இருபத்திநாலு வகையும், அசீரண சீதை யிவையெல்லாந் தீரும்.

நீர்க்கட்டுக்கு சாம்பிராணி பற்பம்

சாம்பிராணி வெள்ளையுள்ளதாய் பளிங்காய் யிருக்கின்றதாய் வேண்டிய மட்டுங் கொண்டுவந்து பொடிசெய்து புது (பானையில்) ~~[illegible]~~ போட்டு அதின்மேல் ஒரு (பானையைக்) மூடாவைக் கவிழ்த்து சீலை மண் செய்து முக்கூட்டு அடுப்பில் வைத்து விளக்கில் விளக்கெண்ணெய் வார்த்து தொண்ணூறு ~~[illegible]~~ இழையில் திரி திரித்துப் போட்டுக் கொளுத்தி அடுப்பில் பானைக்கு நடுவே வைத்து இரண்டு சாமம் எரித்து விளக்கை

நிறுத்திப் போட்டு சாங்க சீதளமாக ஆறவிட்டெடுக்க பற்பமாம். இந்த
அ. பஸ்பத்தை யெடுத்து வைத்துக் கொண்டு நீர்க்கட்டுக்குப் பணவிடை பற்படும் திப்பலிப் பொடியுந் தேனையுமாகக் கூட்டிக் கொடுத்து பெரிய (நாரணி) வெந்நீர் வார்த்த அந்த வெந்நீரின் வியாதிக் காரனை வைக்க நீரடைப்பு, கல்லடைப்பு, மேகக்கட்டு இவையெல்லாம் அருந்து நீர்விடும் (சொரத்தின் மேலே) அனுபான விசேஷத்தில் வைத்துக் கொடுத்து வர அசீரணம், வாய்வு அருந்து நீர்விடும். சுன்னை, சன்னிரோகமுந் தீரும்.

இரசபற்பம்

நல்ல வேப்பிலை சாறு பிழிந்து பெரியபானை நிரம்ப வார்த்து இதில் சுத்தி பண்ணின ரசம் - பலம் - 4 கூட விட்டுப் பானையை யெடுத்தடுப்பில் வைத்து வேப்பங்கட்டை கொண்டு எரித்து வரவும் இப்படி மெத்தவா யெரித்துச் சுண்டி தீர்ந்து போகும் போது சாங்க சீதளமாக ஆறவிட்டு டெடுக்க பஸ்பமாம். இந்த பஸ்பத்தை யெடுத்து வைத்துக் கொண்டு வேளைக்கு பணவிடை

பஸ்பம் அனுபான விசேஷங்களில்
கொடுத்துவர சர்வ ரோகங்களும் தீரும்.
இதற்குப் பத்தியம் - பசுவின் பாலுஞ்
சோறுமாகப் போட்டுவரவும். உண்டு வரவும்

இரசக்கவுதரி பற்பம்

கவுதிரி பலம்-5 கொண்டு வந்து
உடைத்து நடுச்சுழியை எடுத்துப்
போட்டு மற்ற கவுதிரியை எடுத்துக்
கொண்டு இதுக்கு கெந்தகம்-பலம்-1
ரசம்-பலம்-2 இவைகளை கல்வத்தில்
போட்டு எருக்கம்பால் வார்த்தரைத்து
இந்த கவுதிரியை மருந்தில் விட்டுப்
பிரட்டி ரொம்பப் படிப்பதத்து
எடுத்தகலில் வைத்து மேலகல் கொண்டு
மூன்று மூடி சீலை மண் செய்து காய வைத்து
17 கஜபுடத்தில் வைத்து வெந்த பிறகு
சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து
மறுபடி இக்கல்வத்தில் போட்டு எருக்கம்பால்
வார்த்தரைத்து மருந்து உதிரியாக வரும்-
போது மருந்தெல்லா மெடுத்து அகலில்
வைத்து மேலகல் கொண்டு மூடி மூன்று-
சீலை மண் செய்து காய வைத்து கஜ
புடத்தில் வைத்து வெந்தபிறகு சாங்க
சீதளமாக ஆறவிட்டெடுத்து இப்படி

~~[illegible]~~ நாலுபுடம் போட்டெடுக்க பஸ்பமாம்.
இதையெடுத்து வைத்துக் கொண்டு வேளைக்கு
பணவிடை பஸ்பம் அனுபானம் ~~[illegible]~~
விசேஷத்தில் வைத்து ஆடாதோடை யிலைச்
சாறும் தேனுமாகக் கலந்து மருந்து வைத்துக்
கொடுத்து வரத் தீரும் வியாதி - உப்புசம்,
இரைப்பு, அஜீரணபேதி, அஜீரணம்,
மார்க்கனம், சிலேஷ்ட்டும வாய்வு, சிலேஷ்-
-டுமம் யாவைகள் தீரும்.

ஆடாதோடை இலையும் வறள்முள்ளி
இலையும் ~~வறள்முள்ளி யிலையும்~~
நெட்டை பேய்மிரட்டி இலையும் உத்தா-
மணியிலையும், துளசியிலையும் திப்பலி,
திப்பிலி மூலம், சித்திர மூலம், சேவியம்,
அக்கு இவைகள் வகைக்கு மடையளவும்
இவை வகைகளுமாகக் கூட்டி பட்டாணி-
கட்டி வேகவைத்து வெந்தபிறகு இறக்கி
மருந்தெல்லாமெடுத்து நசுக்கிச் சாறு
பிழிந்து கொண்டு இந்தச் ~~அத்தில்~~ சாற்றில் பண-
விடை மருந்து வைத்துக் கொடுத்து வரத்
தீரும் வியாதி - மாரடைப்பு, பக்கபேதி
அஜீரணம், நீர்க்கட்டு, சுரம், சன்னி
பதின்மூன்று வகையும் தோஷமெழுவகையும்
விஷதோஷ மெழுவகையும் ருத்திரவாய்வு
இவையெல்லாம் தீரும்.

ஆடுதீண்டாப் பாளை யிலைச் சாறும்
தேனுமாகக் கூட்டி மருந்து வைத்துக்
? கொடுத்து வர தீரும் வியாதி உன்மாதம்,
மார்பு எரிச்சல்
வயாறெரிவு, மாரெரிவு, அஷ்ட குன்மம்,
நீர்க்கட்டு இவையெல்லாந் தீரும். அனுபான
அ. விசேஷத்தில் கொடுத்து வர சர்வ சீதள ரோகங்-
-களும் தீரும். சர்வ சீதள விக்கங்களும் தீரும்.

கவுதிரி பஸ்பம்

கவுதிரி பலகறை வேண்டியமட்டுங்
கொண்டு வந்து உடைத்து நடுஅழியை
எடுத்துப் போட்டு இந்த பலகறையை
எடுத்து அகலில் வைத்து மேலகல்
கொண்டு மூடி மூணு சீலை மண் செய்து
கெஜபுடத்தில் வைத்து ஐந்த பறந்
சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து
துவம் வேலி..... அத்தி பண்ணி பொரித்-
-தெடுத்து இந்த இரண்டு வகையுஞ் சமன்
கூட்டி கல்வத்தில் போட்டரைத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு ஒரு பணவிடை
பஸ்பம் அனுபான விசேஷத்தில் வைத்து
அருகம் வேர் கஷாயத்துடன் வைத்துக்
கொடுத்து வரத் தீரும் வியாதி - நீர்க்கட்டு,
அஜீரணம், மேகக்கட்டு, கல்லடைப்பு
இவைகள் தீரும்.

இதுவும் - முருங்கை யீர்க்கும் கீழா நெல்லி-
வேர்; நெருஞ்சில் வேர், கத்தாழை மடல்
இவைகள் உடைத்து சட்டியில் போட்டு
தண்ணீர் வார்த்துக் காய்ச்சி கஷாயம்
ஆழாக்கு இருக்க வடிகட்டி மருந்து
வைத்துக் கொடுத்து வர சர்வ வீக்கங்களும்
சாய்க்கும் ~~வத்தும்~~. அஜீரண பேதை, அஜீரணம், நீர்க்-
-கட்டு இவையென்னாந் தீரும்.

பச்சைபோக பஸ்பம் (1)

எஃகு அரப்பொடி வேண்டியன மட்டுக்கும்
கொண்டு வந்து புதுச்சட்டியிலிட்டு ~~இதுக்கு~~
நவல் பட்டையை உரலில் போட்டு
கொடி தெளித்துத் தெளித்துச் சாறு பிழிந்து
அரப்பொடியில் வார்த்துப் பிசறி வெய்ய-
-லிலே வைக்கவும். இப்படி இந்தச்சாறு
வார்த்து மூன்று நாட்கள் வெய்யலிலே
வைத்து மூர்க்கன் வெள்ளைச்சாறு,
வேளைச் ~~சாத்தின்~~ சாத்திரம் இரண்டு நாட்கள்
6. வார்த்து வெய்யலிலே வைக்கவும்.
கரிசலாங்கண்ணி சாறு வார்த்து ஒருநாள்
வெய்யலிலே வைக்கவும். ஆனை நெருஞ்சி-
சாறு வார்த்து வெய்யலிலொருநாள் வைக்-
கவும். திரிபலை கஷாயம் வார்த்து

௨௰௧.

வெய்யலில் ஒருநாள் வைக்கவும். கருவேலம்-
பட்டைச் சாறு வார்த்து வெய்யலில் இரண்டு
நாட்கள் வைக்கவும். இப்படி சாறு வார்த்து
கல்வத்தில் போட்டரைத்து நாலுக்கு பிறகு
வாரியெடுத்து மறுபாண்டத்தில் வைத்துக்
கொண்டு பழகவிட் டெடுத்துக்
கல்வத்தில் போட்டரைத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு காலவராகனெடை
பஸ்பம் அனுபான விசேஷத்தில் வைத்து
தேனோடே யாவது தக்கனையிலாவது
கொடுத்துவரத் தீரும் வியாதி - பாண்டுவும்,
பித்த பாண்டுவும், கொடிய பாண்டுவும்,
விதி3 பாண்டுவும்,
றிஜேச பாண்டுவும், காமாலை மஞ்சக்-
காமாலை, செங்காமாலை, கருங்காமாலை,
ஊது காமாலை, வறள் காமாலை,
அஜீரணம், அதிசாரம், கிராணி, அக்கினி-
மாந்தம் சுரவு ரோகங்களும் தீரும்.

பஞ்ச லோக பஸ்பம்.

அரப்பொடி வெண்மணல் மட்டுக்கும் கொண்டு
வந்து புதுச்சட்டியிலிட்டு யிதுக்கு நாவல்-
பட்டையை யுரலில் போட்டுக் காடி
தெளித்துத் தெளித்து சாறு பிழிந்து இந்த
அரப்பொடியின் வார்த்து பிசறி வெய்யலில்
வைக்கவும்.

பக்கை ரோக பருவம் ②

அரைபொடி வேண்டியன மட்டுக்கும் கொண்டு
வந்து ~~ஆயந்த~~ ஆராய்ந்த சட்டியில் போட்டு கரிசலாங்-
-கண்ணிச் சாறு ~~வார்த்து~~ விட்டு பிசறி வெய்ய-
-லிலே வைக்கவும். சாறெல்லாம் சுண்ட-
விட்டெடுத்துக் கல்வத்தில் போட்டு இந்த
சாறுகள் வார்த்தரைத்து ~~[illegible]~~ மைநந்த பிறகு
யெடுத்து மறுபாண்டத்தில் வைத்து பழுக்கவிட்-
-டெடுத்து கல்வத்தில் போட்டரைத்து
~~[illegible]~~ வைத்துக் கொண்டு இதுக்கு
பிறதி பாகம் சுக்கு, திப்பிலி, மிளகு
ஓமம், வெள்ளுள்ளி இவைகள் சமன்
கூட்டி சூரணம் பண்ணி வெள்ளுள்ளி-
-யைப் பொரித்து அரைத்துக் கூட்டிக்
கலந்து கொண்டு இந்தச் சூரணம்
பங்கு-1, ரோகம் - பங்கு-6 இப்படிக்
கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு
தேன (அ) சர்க்கரையில்
(மாவை) யளவு யெடுத்து தேனோடியாவது
அ. சர்க்கரையிலாவது கொடுத்து வர
தீரும் வியாதி - பாண்டு ரோகமெல்லாம்,
வீக்கங்களெல்லாம், சோகைகளெல்லாம்
திமிர்வாயுகளெல்லாம், அக்கினி மாந்தங்-
-களெல்லாம், கழிச்சல்கள், குன்மங்கள்
கிராணிக் கழிச்சல்கள் க்ஷயங்கள், சுரங்கள்,

அசீரணம், காமாலை யாப்படுப்பட்ட வியாதிக-
ளெல்லாந் தீரும். அக்கினி புஷ்டியுண்டாம்.
தேகபுஷ்டியுண்டாம்.

பஞ்ச லோக பற்பம் ③

அரப்பொடி வெண்டுறை முட்டுக்கும்
கொண்டு வந்து ~~ஆய்ந்து~~ [ஆராய்ந்து] கல்வத்திற் போட்டு
எலுமிச்சம் பழச்சாறு ~~வார்த்து~~ [விட்டு] ஏழுநாட்கள்
அரைத்து கரிசலாங்கண்ணிச் ~~சாற்றில்~~ [சாற்றில்]
அந்நாட்களரைத்து வெள்ளைச் சாறு,
வேளைச் ~~சாற்றில்~~ [சாற்றில்] மூன்று நாட்களரைத்து
யப்படி யரைத்து நேர்ந்தபிறகு வழித்-
தெடுத்து ஒரு கலசத்திற் போட்டு மூடி
முழுமாதம் பழகவிட்டெடுத்து அகனின்
கல்வத்திற் போட்டு
வைத்து பிறகு ...க்குப் பிறகு-
அரைத்~~துக்~~ [தெடுத்து] கொண்டு [illegible] தான்றிக்காய், நெல்லிப்பருப்பு
பாகம் கடுக்காய், ~~தான்றிக்காய்~~, ஏலம் இவை சுக்
கு, திப்பிலி, மிளகு, கொண்டுவந்திடித்து
வகைக்கு பலம்-1 [illegible] கொண்டு சூரணம்
சூரணம் பண்ணிக் கொண்டு சூரணம்
பங்கு-௨௭, லோகம் பங்கு-2 கூட்டிக்
கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு
மாடை யளவு எடுத்து பனைவெல்லத்தில்

பிறந்து கொடுத்து வரத் தீரும் வியாதி -
பாண்டுவால் வந்த வீக்கம்
பாண்டுவத்தோடு கூடின வீக்கங்கள்,
சோகையோடு கூடின வீக்கங்கள்,
காமாலையோடு கூடினதெல்லாம்
குலகுன்மங்கள், அசீரணம், சுரம், அக்கினி
மாந்தம் இவையெல்லாம் தீரும்.

அக்கினியுண்டாம், ரத்தபுஷ்டியுண்டாம்
மகோதரத்துக்கு இந்த மருந்தைக் கொடுத்து
இதுக்குப் பத்தியம் - சங்கம் வேர்ப்பட்டை-
-யை யரைத்து எலுமிச்சங்காயளவு
யெடுத்துக் கொண்டு புளித்த பசுவின் மோர்
நாழியல் கரைத்து வடிகட்டி திணை-
யரிசி ஒருசிரங்கை கூடப் போட்டு
கஞ்சியாகக் காய்ச்சிக் குடித்து வரவும்.
இராக்கான் மிளகுநீரும் சோறுமாகப்
போட்டு வரவும். இதுக்குத் தீரும் வியாதி-
மகோதர வீக்கங்கள் தீரும். ~~வீக்கங்களும்~~
~~வீ தத்திப்போம்.~~

அக்கினியுண்டாம். குன்மத்துக்கு
பெருங்காயம், வெள்ளுள்ளி, யிந்த ரெண்டு
வகையுமாக பசுவின் நெய்யில் பொரித்து
பொடி செய்து கொண்டு மருந்தை (மாலை
யிலையும்) கருப்பட்டியுமாக கூட்டிப்

பிசைந்து கொடுத்து வரவும். இதுக்கு அறுபது நாழிகை சென்றபின் புளித்த கீரையுஞ் சோறு-மாகச் சாப்பிட்டு ~~வரவும். இதுக்கு~~ வந்தால் சர்வ குன்மமுந் தீரும். அஜீரணம். அரமாம். சர்வ-ரோகங்களுந் தீரும். இதுக்குப் பத்தியம் - முருங்கைப் பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு, கத்திரிப்-பிஞ்சு, அரைக்கீரை, துவரம் பருப்பு, மிளகு-நீர், புளிச்ச மோர் இவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

பச்சை மேகபற்பம் (உ)

அரப்பொடி - பலம் - 4, செந்நாயுருவி - சமூலஞ் சூரணம் - பலம் - 4 இந்த ரெண்டு வகையுமாகக் கலந்து சதுரக் கள்ளிப் பால் வார்த்து நாயுருவிக் கொடம் பாலை கிளறிக் கொடுத்து பிறகு பசுவின் பால் வார்த்துக் கிளறிக் கொடுத்து பிறகு ரெட்டுப் பையில் போட்டுக் கூட்டிக் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு 1 மாடை இடை யெடுத்து தேன் (அல்லது சர்க்கரையில்) கொடுத்து வரத் தீரும். பஞ்ச குன்மங்கள், பஞ்ச சூலைகள், வயிற்று நோவுகள், வலிசூலைகள், சூம்பல்

பித்தநீரைக் அசீரணம் நாலுவகையும்
அ. [illegible], குன்மங்கள், மகோத-
ரங்கள், உதிரபாண்டுவும், [illegible]ருமல்
உப்புசம், வாய்வு, நீர்சுருக்கு, அக்கினி-
மாந்தங்கள், வாததோஷங்கள் இவை-
யென்னாந் தீரும். அக்கினியுண்டாம்
தேகபுஷ்டியுண்டாம்.

தாம்பிர பற்பம்

செப்புத் தகடு மெல்லிசாய்த் தட்டிக்
கொண்டு இதுக்கு மருந்து - கழுதை வண்டு
நத்தைசுடுத்த நசம், பாங்கு லிங்கம் பாந்த
பொன்னு வகையும் கல்வத்தில் போட்டு
அரைத்து செப்புத் தகட்டின் மேல் பூசி
ஆறவைத்து பாந்த தகட்டு மேலே
சீலைமண் செய்து காயவைத்து இதுக்கு
கலியாண பூசணிக்காய் கொண்டு வந்து
அறுத்து உள்பட பாருக்கின்ற விரை
அந்தையென்னாந் தள்ளிப் போட்டு அதந்-
தையென்னாந் உள்ளே இந்தச் செப்புத் தகட்டை வைத்து
அது மேல் மூடி கொண்டு மூடி மேலே
சாணி கொண்டு பொதிக்க காயவைத்து
பெரிய குழி வெட்டி அந்தக் குழிக்குப் பாதி

காட்டு வரட்டி யடுக்கி அதுமேலே
காயை வைத்து அதுமேலே மறுபடி காட்டு
வரட்டி யடுக்கி எருக்கு கொட்டிப் புடம்
போட்டு வாங்க சீதளமாக ஆறவிட்-
-டெடுக்க பற்பமாம்.

தாம்பிர பற்பம்

செப்புத்தகடு மெல்லிசாய்த் தட்டிக்
கொண்டு இதுக்கு மருந்தெல்லாம் - ரசம்
யாங்கிலிகம் இந்த இரண்டு வகையுமாகச்
சீமண் சட்டி கல்வத்தில் போட்டு எலுமிச்-
-சம்பழச் சாறு வார்த்து அரைத்த பிறகு
முசுமுசுக்கைச் சாறு வார்த்து அரைத்து செப்புத்
தகட்டுக்குப் பிடிப்பித்து காய வைத்து
சீலைமண் செய்து மறுபடி காய வைத்து
கலியாண பூசணிக்காய் கொண்டு வந்து
வடுவாய் அறுத்து உள்விதை சதையெல்லாம்
எடுத்துப் போட்டு அதுக்குள்ளே செப்புத்
தகட்டை வைத்து மேல் சட்டி கொண்டு
மூடி காய் மேலே சாணி கொண்டு பொதிக்க
காயவைத்து பெரிய குழி வெட்டி அந்தக்
குழிக்குப் பாதி காட்டெரு முட்டையடுக்கி
அதுமேலே காயை வைத்து அதுமேலே

காட்டெரு முட்டை நிரம்பக் கொட்டி புடம்
போட்டு ..... சாங்க சீதளமாக ஆறவிட்-
டெடுக்க பஸ்பமாம். இந்த பஸ்பங்களை
அவிழ்தங்களுக்குப் போட்டுக் கொள்ளவும்.

நாகபற்பம்

நாகம் வேண்டுமட்டுங் கொண்டு வந்து
கல்வத்தில் இட்டு புளிச்சாறு ~~பச்சைச்சாறு~~ வார்த்து
பன்னிரெண்டு நாட்கள் அரைத்து ~~[illegible]~~ பிறகு
வெல்லாமொரு வில்லையாகத் தட்டி
ஆறவைத்து ஆறினபிறகு எடுத்து அகலில்
வைத்து மேலகல் கொண்டு மூடி ~~[illegible]~~
சீலை மண்செய்து காயவைத்து பெரிய
சட்டிக்கு நடுவே உள்ளங்கையகலம் ~~[illegible]~~
வுடுவாயுடைத்தெடுத்துப் போட்டு அதன்
நடுவே அகலை வைத்து அதுமேலே
நெரம்பக் கரியைக் கொட்டி மூடு வரட்டி அடுப்பிலே
சட்டியை யெடுத்து ~~முக்கூட்டா அடுப்பிலே~~
வைத்து மெதுவாய் நாலுசாமம் எரித்து
சாங்க சீதளமாக ஆறவிட்டெடுக்க
பற்பமாம். இதை யெடுத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு பணவிடை பஸ்பம் அநுபான
வகைகளில் வைத்துக் கொடுத்து வரத்
தீரும் வியாதி - சர்வ ~~[illegible]~~ சுரங்களும், கைப்பும்
~~[illegible]~~ பதினொரு வகையும், உப்புசம்,
~~[illegible]~~ளைப்பு, புளிச்சை, யாருமன் ~~[illegible]~~ ரோகங்களெல்
தீரும். பத்தியம் - ~~[illegible]~~
இவிக அக்காரம் உண்டு வரவும்.

தாளகக் கருப்(பு) பற்பம்

தாளகம் வெண்டின மட்டுங்
கொண்டு வந்து கல்வத்திற் போட்டு
கற்றாழை மடல் சாற்றினால் பதனைந் தரைந்து
யிப்படி யேழு நாட்கள் அரைத்து ஆறவிட்-
-டெடுத்து வெள்ளா மெழுகுமாய் வரு
வில்லையாகத் தட்டி காயவைத்து
யெடுத்து அகலில் வைத்து மேலகல்
கொண்டு மூடி ஏழு சீலைமண் செய்து
காயவைத்து பெரிய சட்டியின் நடுவு
உள்ளங்கை யகலம் வடுவா யுடைத்துப்
போட்டு அதுக்கு நடுவே அகலில்
வைத்து அது மேலே நொரம்ப கரியைக்
கொட்டி ரொப்பி முக்குட்டா னெருப்பங்
கனலைக்-வைத்து தீபாக்கினி ஒருசாமங் கமலாக்-
-கினி ஒருசாமங் காலாக்கினி ஒருசாமங்
காடாக்கினி ஒருசாமம் இப்படி நாலு
சாமம் யெரித்து சாங்க சீதளமாக
ஆறவிட் டெடுக்க தாளகம் நாவல்
பழம்போல கருப்பாம். இதை யெடுத்
வைத்துக் கொண்டு வேளைக்கு பணவிடை
யெடுத்து அனுபான விசேஷங்களில்

வைத்துக் கொடுத்துவரத் தீரும் வியாதி-
சிறுநீர் அரோகங்களும் (சேஷ்யம்) பதினொரு
வகையும், நீர்க்கட்டு ஆறு வகையும்
சினை, அருமன், உப்புசம், இரைப்பு,
சுவாசகாசம் இவை முதலான சிறுநீர்
ரோகங்களும் தீரும்.

தாளக பற்பமும் செந்தூரமும்

அத்தி பண்ணின தாளகம் வேண்டிய
மட்டும் கொண்டு வந்து கல்வத்தில் போட்டு
பொடியா அரைத்துக் கொண்டு ~~மருந்து~~
மருந்து - வெள்ளைச்சாறு வேளையினை-
-யை அரைத்து வில்லை தட்டி அகலில்
வைத்து தாளகப் பொடியை அது மேலே
பரப்பி அது மேலே முக்காத்தா இலையை
அரைத்து வில்லை தட்டி ~~அது மேலே~~ மூடி
மேலுக்கு அகல் கொண்டு மூடி ஏழு
சீலை மண் செய்து காய வைத்து பெரிய
சட்டியில் நாலு விரற்கனம் மணல் போட்டு
பரப்பி அது மேலே அகலை வைத்து மேல்
சட்டிக் கொண்டு மூடி எழு சீலை
மண் செய்து சட்டி மேலுக்குச் சாணியும்
31. மண்ணுமாகப் பிசைந்து மேல் சட்டிக்கு
மேலெங்கும் பூசிக் காயவைத்தெடுத்து

கடுகு
~~முக்கிட்டா~~ அடுப்பில் வைத்து தீபாக்கினி
இரண்டு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம்
குக்குடாக்கினி மூன்று சாமம் இப்படி
யெரித்து மறுநாள் தாங்க சீதளமாக
ஆறவிட்டெடுக்க அதன் மேலேயுள்ள
பற்பம் பழுந்திருக்கும்
சட்டி மேனியையும் ~~பஸ்பம் பத்தியிருக்கும்~~
கிளைகளை
~~பத்திகளை~~ வேறே எடுத்து வைத்துக்
கொள்ளவும். அதுக்கிள்ளே வாளப்பழம்
போலே செந்தூரமாயிருக்கும். அதை
வேறே யெடுத்து வைத்துக் கொள்ளவும்
பற்பம்
வேளைக்கு பணவிடை ~~பஸ்ப~~மெடுத்து
வெற்றிலையில் வைத்து மடித்துக் கொடுக்-
-கவும். இப்படி மூன்று நாட்கள் கொடுக்க
நாட்பட்ட
~~கடுப்பட்ட~~ சீதரம் ஆறுவகையும்
விடும். அனுபான விசேஷத்தில் பணவிடை
பஸ்பம் வைத்து தேனோடே கொடுத்து-
நாட்பட்ட
வர ~~கடுப்பட்ட~~ சுரங்களும் தேகசு
சுரங்களும் சிவாதசாதம், உப்புசம்
புளி, இருமல் ~~[illegible]~~ இளைப்புகள் தீரும்.
பணவிடை செந்தூரம் ~~[illegible]~~ அனுபான
சாற்றில்
விசேஷத்தில் வைத்து இஞ்சிச் ~~சாறுத்தில்~~
கொடுத்து வர சர்வ சுரங்களும் விடும்.

சர்க்கரையில் வைத்துக் கொடுத்து வர
அதிசாரக் கழிச்சலோடே சகலமேக-
மெல்லாந் தீரும். அக்கினி யுண்டாம்.

வங்கபற்பம்.

வெள்ளீயம் வேண்டியன மட்டுங்
கொண்டு வந்து சட்டியில் போட்டு
அடுப்பில் வைத்துருக்கி கத்தாழை (கற்றாழை)
மடல் சாத்தில் (சாற்றில்) மூணு (மூன்று) முறை உருக்கி
வார்க்கவும். புளிச்ச மோரில் மூணு (மூன்று)
முறை உருக்கி வார்க்கவும். காடியில்
மூணு முறை (மூன்றுமுறை) உருக்கி வார்க்கவும்.
கரிசலாங் கண்ணிச் சாத்தில் (சாற்றில்) மூணு (மூன்று)
முறை உருக்கிச் சாய்க்கவும். எலுமிச்-
சம்பழச் சாத்தில் (சாற்றில்) மூணு (மூன்று) முறை உருக்கி
வார்க்கவும். விளக்கெண்ணையில்
மூணு (மூன்று) முறை உருக்கி வார்க்கவும்.
பசுவின் கோமியத்தில் மூணு (மூன்று) முறை
உருக்கி வார்க்கவும். இப்படி உருக்கி
வார்த்தெடுக்க சுத்தியாம். இப்படி சுத்தி
பண்ணின வங்கத்தை மாறுகால் (நாளி) சட்டி-
யில் வைத்துருக்கி மெல்லிய ரேக்கு வார்த்
அ! யெடுத்துக் காகிதம்போலே. வெட்டி யெடுத்து

தினைமாவை சாந்தில் ஒன்பது நாள் ஊறபோட்டு புனிதாரு
வரகை கொண்டு புடைக்கவும். முதலில் வரகுமாவை குருத்
தையாக பரப்பி அதன்மேல் வரகு பரப்பி அதன்மேல் வரகை
பரப்பவும். இவ்வாறு நான்கு அடுக்குமுறை செய்து ஆவியிட்ட
-ருக்க வெங்காரம் போல் பொரிந்திருக்கும். இதைமண்
பாத்திர பின்பாகத்தில் தண்ணீர் விட்டு அதில் போட்டு
மசிக்க சீலையால் வடிகட்டி எடுத்தமாவை எல்லாம்
எடுத்து போட்டு நிறை ஊறகட்டி அடியில் கிடாவ
உள்ள குருணை நீக்கி 2 அல்லது 3 வகை சுக்கிலத்தின்மேல்
புனிதமை பரப்பி அதன் மேல் குருணை வைத்த மேல்
வரகு பரப்பி 2 அல்லது 3 முறையால் புடை குக்குடபுடமிட்டு
ஆவியிட்டெடுக்க பிறகு.

அளவு : பணவிடை

அனுபானம் : தேன், பசுவெண்ணெய், சர்க்கரை

சுற்றுச்சுவை சட்டியில்
~~சித்திரமுடை~~டன் சாத்தில் போட்டு மூடிப்பு
நாழிகை புறவாட்டெடுத்துக் கொண்டு
இதுக்குப் புடம்போடும் வகை - புளியம்
வறடும் வராட்டியமாகக் கொண்டு
~~வந்து முந்தி~~ வராட்டியை யொருவரிசை-
-யாகப் பரப்பி அதன் மேலே புளியம்
வறடு கொட்டை பரப்பி அது மேலே வங்கத்-
-தைப் பரப்பி அதன் மேலே வராட்டியைப்
பரப்பி அதன் மேலே புளியம் வறடு பரப்பி
அதன் மேலே வங்கத்தைப் பரப்பி இப்படி
நாலு ~~பத்திக்கு~~ முறை அந்த ~~பத்திக்கு~~ முறை போட்டு மூடிப்
புடம் போட்டு வெந்து சுவாங்க சீதளமாக
ஆறவிட்டெடுக்க ~~வெள்ளிக்காரம்~~ வெங்காரம் போலே
பொரிந்திருக்கும் இதையெல்லா மெடுத்து
பீங்கானில் தண்ணீர் வார்த்துக் கொண்டு
இந்த மருந்தெல்லாம் போட்டுப் பிசைந்து
சீலையில் வடிகட்டி அப்பொடியெல்லா
மெடுத்துப் போட்டு நீர் தெளியவிட்டு
இறுத்துப் போட்டு அடியில் குழம்பெல்-
-லாஞ் சேர்த்து நீர்றங்க விட்டு மருந்-
-தெல்லாந் திரட்டி ஒண்டு ~~வேர்~~ வராட்டி
யடுக்கி அதின்மேலே புளியம் வறடு
பரப்பி அதன் மேலே மருந்தை வைத்து

அதன்மேலே புளியம் வறடு போட்டு
மூடி அதன்மேலே மூணு வறாட்டி யடுக்கி
குக்குடபுடமாகப் போட்டு சாங்க
சீதளமாக ஆறவிட்டெடுக்கப் பற்பமாம்
இந்த பற்பத்தை யெடுத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு பணவிடை
யெடுத்து அனுபான விசேஷத்தில்
வைத்து தேனிலாவது பசுவின் வெண்-
-ணையிலாவது அக்காரையிலாவது கொடுக்-
-கத் தீரும் வியாதி - அஸ்தி சுரம்,
மாந்த சுரம், இரத்த சேஷ்மம், இரத்தபித்தம்,
இருமல், இரைப்பு, உப்புசம், மேகம்,
நீர்ச்சுருக்கு, நீரெரிவு, மேகத்திணை,
மேகவாய்வு, கொறுக்கை மாந்தை,
கிரந்திப்புண், சேஷ்டை, மேகசூலை,
அசீரணம், அக்கினி மாந்தம், சேஷ்மம்
இவையெல்லாந் தீரும்

வங்க பற்பம்

22 வெள்ளீயம் வேண்டுமட்டுங்
கொண்டு வந்து சட்டியில் போட்டு அடுப்பில்
வைத்துருக்கி கொள்ளுக் கட்டு நீரில்
மூன்று முறை சாய்க்கவும். புளியினைச் சாற்றில்

வங்க சுத்தி

வெள்ளீயம் வேண்டிய மட்டும் கொண்டு சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து உருக்கிக் கொள்ளுக பிறகு, புளியிலை சாறு, புளித்தமோர், காடி, சதுரக்கள்ளி சாறு, கரிசாலை, சாறு, கற்றாழை சாறு, இவையனைத்திலும் வெவ்வேறே மூன்று முறை உருக்கி சாய்க்க சுத்தியாகும்

மூணு முறை சாய்க்கவும். புளித்த மோரில்
மூணு முறை சாய்க்கவும். காடியில்
மூணு முறை சாய்க்கவும். எலுமிச்சம்-
பழச் சாற்றில் மூணு முறை சாய்க்கவும்
கருசெலாங்கண்ணிச் சாற்றில் மூணு முறை
சாய்க்கவும். கத்தாழை மடல் சாற்றில்
மூணு முறை சாய்க்கவும். இப்படி யுருக்கி
வார்த்தெடுக்கச் சுத்தியாம். பிற்படி
சுத்தியான ~~வங்க~~ வங்கத்தை யெடுத்து
ஒரு சாடியில் நாயுருவிச் சாம்பல்
மூணு விரல் கனம் பரப்பி அதன் மேலே
வங்கத்தை வைத்து அதன் மேலே
நாயுருவிச் சாம்பல் மூணு விரல் கனம்
பரப்பி சட்டியை அடுப்பில் வைத்து
எரிக்கவும். வங்க முருகி புகையெடுக்-
-கும் போது காட்டு முருக்கந் தடி-
யாலே மத்தித்து வரவும். புகை
தீர்ந்தவுடன் நாயுருவிச் சாம்பல்
போட்டு வரவும். இப்படி மத்தித்து
வர வங்க பற்பமாம். இதை யெல்லா
மெடுத்து ~~[illegible]~~ சீலையில் கட்டி
அரித்தெடுத்து கல்வத்தில் போட்டு
சாறு சாறு சீலை சாறு
~~எலுமிச்சம் பழச் சாற்றிலும் கத்தாழை மடல்~~
சாறு
சாற்றிலும் கொடிமாதளம் பழச் சாற்றிலும்

இப்படி வகைக்கொரு துங்கைச் சாறு
வார்த்து ஒவ்வொருநாளரைத்து வில்லை
தட்டி அகலின் வைத்து மேலகல் கொண்டு
மூடி எருச்சீலை மண்செய்து கஜபுடம்
போட்டு வாங்க சீதளமாக ஆறவிட்-
-டெடுக்கவும் இப்படி மூன்று வகைச்
சாத்திரம் மூன்றுபுடம் போட்டு எடுக்க
வங்க பற்பமாகும் இந்த பற்பத்தை யெடுத்து
வைத்துக் கொண்டு வேளைக்கு பணவிடை
பற்பமெடுத்து அனுபான விசேஷத்தில்
வைத்து தேனோடேயாவது பாலின்
வெண்ணெயிலாவது சர்க்கரையிலாவது
கொடுத்து வர தீரும் வியாதி - மேகம்,
நீர்சுருக்கு, நீரெரிவு, மேகரணம் இருமல்
அ. சேட்டுமம், இத்தகாசம், இரத்தபித்தம்,
மேகசூலை, நீர்க்கடுப்பு, மேகவாய்வு,
அஜீரணம், அக்கினிமாந்தம் யிவை-
யெல்லாந் தீரும்.

வங்கபற்பம்

வெள்ளீயம் வேண்டுமட்டுங்
கொண்டுவந்து சட்டியில் போட்டு
அடுப்பில் வைத்துருக்கி புளியிலைச்
சாத்தின் மூன்றுமுறை யுருக்கி வார்க்கவும்

ஆமணக்கெண்ணையில் ஊறுமுறை.
கரிசலாங் கண்ணிச் சாற்றில் ஊறுமுறை,
கற்றாழை மடல் சாற்றில் ஊறுமுறை, புளிச்ச
மோரில் ஊறுமுறை, பசுவின் கோமியத்தில்
ஊறுமுறை, கொள்ளுக்கட்டு நீரில் ஊறு-
முறை இப்படி புடக்கி இந்தச் சாறுகளில்
வார்த்தெடுக்கச் சுத்தியாம். இப்படி
சுத்தியான வங்கத்தை மறுகால் சட்டியில்
போட்டுருக்கி ரெக்கு வார்த்துக் கொண்டு
யந்த ரெக்கை காசு போலே வெட்டி
எடுத்துக் கொண்டு பருங்காட்டு விராட்டி
இருபது கொண்டு வந்து இந்த விராட்டிகளில்
பள்ளமாகத் தோண்டி எடுத்துப் போட்டு
அதுக்குள்ளே புளியம்வறடு சுட்ட
சாம்பலைப் போட்டு அதின் மேலே
வங்க ரெக்கைப் போட்டு அதன் மேலே
புளியம் வறடு சுட்ட சாம்பலைப் போட்டு
மூடி யப்படி இந்த விராட்டிகளெல்லாம்
போட்டு மூடி இந்த விராட்டியெல்லாம்
வரிசையாகத் தட்டி அதுமேலே விராட்டிப்
பொடிகளைப் போட்டு மூடி புடம் போட்டு
ஆங்க சீதளமாக ஆறவிட்டெடுக்க
வெண்காரம் போலே பொரிந்திருக்கும்.
யதையெல்லா மெடுத்துப் பீங்கானில் போட்டு

நீர் வார்த்துப் பிசைந்து வடிகட்டிய
மெல்லா மெருத்துப் போட்டு பிந்த வடி-
கட்டின நீரையெல்லாம் வடித்துப் போட்டு
அடிக்கிடும் வெள்ளாந் திரட்டி யெடுத்து
உண்டையாகத் திரட்டி ரெண்டு விராட்டி-
23 -யின் மேலே புளியம் வாடு பரப்பி அதன்-
மேலே மருந்தை வைத்து அதன் மேலே
புளியம் வாடு போட்டு அது மேலே ரெண்டு
விராட்டியாலே மூடி புடம் போட்டு சாங்க
சீதளமாக ஆறவிட்டெடுத்து வைத்துக்
கொண்டு வேணைக்கு பணவிடை பஸ்பம்
அனுபான விசேஷத்தில் வைத்து சக்கரை-
-யாவது பசுவின் வெண்ணையாவது
தேனாவது கொடுத்து வரத் தீரும் வியாதி-
மேக நீர்ச் சுருக்கு, நீர்க்கடுப்பு, மேகவாய்வு,
வெள்ளை, இருமல், ரத்த க்ஷயம்,
மேகத்தினை, மேகவாய்வு
ரத்தபித்தம்,
இவையெல்லாந் தீரும்.

வங்க பஸ்பம்.

வெள்ளீயம் வேண்டின மட்டும் கொண்டு
வந்து சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து
உருக்கி கொள்ளுக் கட்டு நீரிலும் ஆமணக்கு
எண்ணையிலும் கத்தாழை மடல் சாற்றிலும்
கோமியத்திலும் மோரிலும் காடியிலும்

எலுமிச்சம் பழச் சாத்திரம் இப்படி வகைக்கு
மூன்று முறை உருக்கி வார்க்கவும் இப்படி
உருக்கி வார்த்தெடுக்கச் சுத்தியாம். மருந்தை
சட்டியில் போட்டுருக்கி நெக்கு வார்த்து
பொடிப் பொடியாக வெட்டிக் கொண்டு
இதற்கு அம்மான் பச்சரிசி செடிச் சமூலம்
கொண்டு வந்து நிழலுலர்த்திப் பொடி செய்து
பெரிய சீலையின் மேலே இந்தப் பொடியை
பரப்பி அதுமேலே வங்கத்தைப் பரப்பி
பந்தம் போலே அழுத்தமாய்ச் சுருட்டி
அதுமேலே கோணிப் பட்டைச் சுருட்டிக்
கட்டிக் கொளுத்திக் காற்றுப் படாத இடத்தில்
பந்தத்தைச் சுவரோடே சாத்தி வைக்கவும்
இது வெந்து தணிந்து விடும். இது வெங்-
-காரம் போலே பொரிந்திருக்கும். அதை-
யெல்லா மெடுத்துச் சேர்த்தரைத்து அரித்து
வைத்துக் கொண்டு வேணைக்குப்
பணவிடை பஸ்பம் அனுபான விசேஷத்-
-தில் வைத்துக் கொடுத்துவரத் தீரும் வியாதி-
சுரம் ரோகங்களுந் தீரும். இந்த பஸ்ப
மாத்திரைக் கட்டு வகை இதுக்கு பத்தி
அ. பாகல் சுக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய்
சாதிபத்திரி இலவங்கம், அக்கரகாரம்.

வகைக்கு சமன் கூட்டி கல்வத்தில் போட்டு
அத்தாழ்மடல் சாறு வார்த்தரைத்து (மாடைப்-
பிடை பிரமாணம்) மாத்திரை திரட்டி நிழலு-
லர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கொரு
மாத்திரை தேனிலாவது சர்க்கரையிலாவது
வைத்துக் கொடுத்துவரத் தீரும் வியாதி-
மேக சூலைகள், சூலைக்கட்டுகள், மேக-
ரணங்கள், மேகங்கள், மேகவாய்வுகள்,
நீர்ச்சுருக்கு, நீரெரிவு, ரத்தக்ஷயம்,
ரத்தபித்தம், சூலை, இருமல், அக்கினி-
மாந்தம் இவையெல்லாந் தீரும்.

அக்கினி குமாரம்

அத்திவண்ணிரசம், கெந்தகம், காரம்,
வ.கு. அரப்பொடி, செம்புநக்கு யிவைகள்
சமன்கூட்டி கல்வத்தில் போட்டு செருப்-
படைச்சாறு விட்டு ஒரு நாளரைத்து
ஆறவிட்டெடுத்து வலையன் குப்பியி-
லடைத்து புழுசீலைமண் வெழுசீலைமண்
செய்து ஒருபானையில் அரைப்பானை
மணலெடுத்து அதின்மேலே குப்பியை
வைத்து பாதிய அதின்மேலே மணல்
சொரிந்து குப்பிவாய் தெரியவிட்டு மேல்
சட்டி கொண்டு மூடி ஒரு சீலைமண் செய்து

அடுப்பில் வைத்து கமலாக்கினியாக பன்னிரண்டு சாமம் எரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து மருந்தெ-டாம் வாங்கி கல்வத்தில் போட்டு அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு வேளைக்கு உளுந்து பிரமாணமெடுத்து இஞ்சிச் சாத்தில் கொடுத்து வர சன்னி பாதங்களும், ஜுரங்களும் தீரும்.

உலோக அக்கினி குமாரம்

இரசம், பொன், வெள்ளி, வெள்ளியம் உலோகம், காரீயம், செம்பு, வெங்கலம், பித்தளை, துத்தநாகம் பஞ்சலோக பற்பங்கள் சரியெடை கட்டி கல்வத்-
24. -தில் போட்டு எருக்கம்வேர் கியாழம் வார்த்து மூன்று நாட்களரைத்து ஆறவிட்டு பிறகு வளையல் குப்பியில் வைத்து ஏழு சீலை மண் செய்து பெரிய பானை-யில் அரைப்பானை மணல் போட்டு அதுமேல் குப்பியை வைத்து அது மேலே மணல் போட்டு குப்பிவாய் தெரிய விட்டு மேல் சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து

குமராக்கினியாக ஆறு சாம மெரித்து
சாங்க சீதளமாக ஆற விட்டெடுத்து
மருந்தென்னவாம் வாங்கிக் கல்வத்தில்
போட்டு அரைத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு இன்றி பிரமாண மெடுத்து
அனுபான விசேஷத்தில் கொடுத்து வர
சர்வ ரோக அரங்களுந் தீரும்.

அ. ## சித்ராக்கினி குமாரம்

அத்திப்பண்ணிக்கரசம், அமரசாரகந்தகம்
வெண்காரம், நாபி இவைகள் சமன்
எட்டு கல்வத்தில் போட்டு அருக்கிலைச்-
-சாறு வார்த்தரைத்து மிளகு போலே
மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வச்சிர
மூசிப்படியில் வைத்து சீலைமண்
செய்து ஒரு இன்னொரு சட்டியில் மணல்
போட்டு அதுமேலே மூசட்டியை
வைத்து அதுமேலே மணல் போட்டு
மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண்
செய்து குழிவெட்டி யெடுத்து யிந்தக்
குழியில் புடத்துக்கு விராட்டி யடுக்கி
யிந்த இண்டு சட்டியையும் புடத்தில்
வைத்து புடம் போட்டு சாங்க சீதளமாக

ஆறவிட்டெடுத்து வைத்துக் கொண்டு
அனுபான விசேஷத்தில் வைத்துக்
கொடுத்துவர சன்னி பாதம் தோஷ
சுரங்களெல்லாந் தீரும்.

இலகுவக்கினி குமாரம்

சுத்தி பண்ணின ரசம், வெண்காரம்
அமர்சார கெந்தகம், அரிதாரம், மனோசிலை
வைகளை சமன் சேர்த்து கல்வத்தில் போட்டு
கொடுப்பைச் சாறு வார்த்தரைத்து
ஆறவிட்டெடுத்து வளையல் குப்பியி-
லடைத்து முழுசீலை மண் முழு
செய்து சிறுபானையில் அரைபானை
மணல் போட்டு அதுமேலே குப்பியை
வைத்து அதுமேலே மணல் போட்டு
குப்பிவாய் தெரிய விட்டு மேல் சட்டி
கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து
அடுப்பில் வைத்து கமலாக்கினியாக
ஆறுசாமம் எரித்து சாங்க சீதளமாக
ஆறவிட்டெடுத்து மருந்தெல்லாம் வாங்கி-
கல்வத்தில் போட்டரைத்தெடுத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு குன்றி பிரமாணம்
எடுத்து அனுபான விசேஷத்தில்

வைத்துக் கொடுத்து வர சன்னி வாத
உடு. தோஷங்களும் தீரும்.

மகா அக்கினி குமாரம்.

சுத்தம் பண்ணின ரசம், காடி, அப்பிரகம், கெந்தகம், தாளகம், சாதிலிங்கம் எலிப்பாஷாணம், தாம்பிர பற்பம் இவைகளை சமனெடுத்து கல்வத்தில் போட்டு கரிச-லாங்கண்ணிச் சாறு வார்த்தரைத்து ஆறவிட்டெடுத்து வளையின் குப்பியி-லடைத்து முடிச்சீலை மண் ஏழு செய்து ஒரு பானையில் அரைப்பானை மணல் போட்டு அதுமேலே குப்பியை வைத்து அதுமேலே மணல் சொரிந்து குப்பிவாய் தெரியவிட்டு மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து அடுப்பில் வைத்து கமலாக்கினியாக ஆறு சாமமெரித்து சாங்க சீதளமாக ஆற-விட்டெடுத்து மருந்தெல்லாம் வாங்கி கல்வத்தில் போட்டரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு குன்றி பிரமாணம் எடுத்து அனுபான விசேஷத்தில் வைத்துக் கொடுத்து வர சன்னி பாத தோஷ ரோகங்களும் தீரும்.

பிரதாப அக்கினி குமாரம்

சுத்திபண்ணின ரசம், தாம்பிர பற்பம்
நாபி, மிளகு, சுக்கு, சுத்தி (மிருதாரசிங்கம்) வெள்ளைச்சாரம்
(சுத்தி வெவச்சாரம்) ஜாதிக்காய், பஞ்சலவணம்,
இவைகள் சமன் கூட்டி கல்வத்திற்
போட்டு இஞ்சிச்சாறு வார்த்தரைத்து
ஆறவிட்டெடுத்து வளையல் இப்பாய்-
லடைத்து புழிச்சீலைமண் ஏழு செய்து
ஒரு பானையின் அரைப்பானை மணல்
போட்டு அதுமேலே இப்பியை வைத்து
அதுமேலே மணல்சொரிந்து இப்பிவாய்
தெரியவிட்டு சமன் கூட்டிகொண்டு மூடி
ஒருசீலைமண் செய்து அடுப்பில் வைத்து
கமலாக்கினியாக நாலுசாமமெரித்து
சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து
மருந்தெல்லாம் வாங்கி நிறுத்தி இந்த
அ. எடைக்கு பத்திலொரு பங்கு நாபி
கூட்டி கல்வத்தில் போட்டரைத்து
வைத்துக் கொண்டு வேளைக்கு குன்றி
பிரமாணம் எடுத்து அனுபான விசேஷத்-
-தில் வைத்துக் கொடுத்தால் 3 சர்வ
தோஷ ஜன்னி பாத சுரங்களும் தீரும்.

பிராண அக்கினி குமாரம்

சுத்திபண்ணின ரசம், நாபி, அப்பிரகம்
கெந்தகம் இவைகள் சமன் கூட்டி

கல்வத்தில் போட்டு பர்பாடகச் சாறு
வார்த்து மூன்றுசாமமரைத்து ஆறவிட்-
டெடுத்து வச்சிர மூசையில் வைத்து
மேல் மூடி கொண்டு மூடி ஒரு சீலை-
மண் செய்து ஒரு குண்டு சட்டியில்
மணல் போட்டு அது மேலே ~~மூசை~~
மூசையை வைத்து அதுமேலே
மணல் போட்டு மேல் சட்டி கொண்டு
மூடி ஒரு சீலைமண் செய்து ~~[illegible]~~
கஜபுடத்தில் வைத்துப் புடம் போட்டு
சாங்க சீதளமாக ஆறவிட் டெடுத்து
மருந்தையெல்லாம் வாங்கி கல்வத்தில்
போட்டு மீன்பித்தம் வெள்ளாட்டு
பித்தம் மயில் பித்தம் யிவைகள்
வார்த்தரைத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு குன்றிப்ரமாணம் சருக்கு
அனுபான விசேஷத்தில் கொடுத்துவர
[illegible] தோஷ சன்னிபாத ரோகங்களும்
தீரும்

தெய்வீக அக்கினி குமாரகம்

அத்தி பண்ணிகரசம், நாபி இந்த
இரண்டு வகையும் கூட்டி கல்வத்தில்
போட்டு சித்திர மூலக்கியாழம் வார்த்-
தரைத்தரைத்து மிளகு போலே மாத்திரை
திரட்டி நிழலுலர்த்தி மூசையில் வைத்து

சீலைமண் செய்து ஒரு பானையின்
அரைப்பானை மணலையெடுத்து அதுமேலே
மூசையை வைத்து அதுமேலே மணல்
சொரிந்து மேல் சட்டி கொண்டு மூடி
26. சீலைமண் செய்து அடுப்பில் வைத்து
கமலாக்கினியாக நாலுசாமமெரித்து
சாங்க சீதளமாக இரண்டு நாட்கள்
ஆறவிட்டெடுத்து மருந்தெல்லாம்
வாங்கி கல்வத்தில் போட்டு திரிகடுகு
தயிலம் வார்த்தரைத்து முற்பாடு இந்த
மருந்துக்கு நாலிலொரு பங்கு கிராம்பு
கூடப் போட்டு ~~மேகத்துக்கும் தக்க~~ -
அவரியிலைச்சாறு வார்த்தரைத்தெடுத்து
வைத்துக் கொண்டு வேளைக்கு குன்றி
பிரமாணம் எடுத்து அனுபான
விசேஷத்தில் கொடுத்துவர சர்வ-
தோஷ சன்னி பாதங்களும் தீரும்.

உத்தம அக்கினி குமாரம்.

அத்திபன்னிரசம், அப்பிரகபற்பம்
காந்தபற்பம், லோகபற்பம், தாம்பிரபற்பம்,
நாப் இவைகளை சமன் கூட்டி
கல்வத்தில் போட்டு செருப்படைச்
சாறு வார்த்து மூன்றுநாட்களரைத்து
மிளகு போலே மாத்திரை திரட்டி

நிழலுலர்த்தி வண்ணையன் சிப்பியிலடைத்து
முழுச்சீலைமண் ~~[illegible]~~ செய்து ஒரு
பானையி லரைப்பானை மணலிட்டு
அதின்மேல் சிப்பியை வைத்து அதின்மேல்
மணல் சொரிந்து மேல் சட்டி கொண்டு
மூடி சீலைமண் செய்து அடுப்பில்
வைத்து கமலாக்கினியாக ஆறுசாமம்
எரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டு
எடுத்து மருந்தெல்லாம் வாங்கி கல்வத்
-தில் போட்டு அரைத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு உளுந்து பிரமாண
-மெடுத்து அனுபான தாக்ஷதைத்தில்
வைத்துக் கொடுத்து வர 3 நாளில் 13
பத்தியம் — இச்சாபத்தியம்
வகையும் தீரும். ~~இத்தை [illegible]~~
பத்தியம் ~~[illegible]~~ தரவும். தாகத்துக்கு
இக்கரை பானக்கம், கருப்பஞ்சாறு இளநீர்
இவைகள் கொடுத்து வரவும். இந்த பத்
வகையும் அக்கினி குமாரமென்றும்
~~பெயர்~~ பூபதியென்றும் பெயர். இந்தப்
பாவங்களை வாகடாரண்டிரம் பாக்கள்
லென்றும் ~~பெயரிது~~ அறிந்து கொள்ளவும்.
~~இந்தப் பத்தியமைவும் பூபதியென்றும்~~
பெயர்.

சூத வயிரவ ரசம்

கெந்தகம், தாம்பிர பஸ்பம் இவைகள் சமன் கூட்டி கல்வத்தில் போட்டு சித்திர மூலக் கியாழம் வார்த்தரைத்து வாரியெடுத்து வச்சிர மூசையில் வைத்து சீலைமண் செய்து வாலுகா எந்திரத்தில் வைத்து ஒருநாள் கமலாக்-கினியாக எரித்து ஆங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து கல்வத்தில் போட்டு புண்ணைப் பச்சரசம் நரிப்பாச்சரசம் வார்த்து இரண்டு சாமம் அரைத்து வாரியெடுத்து வைத்துக் கொண்டு வேளைக்கு குன்றி பிரமாணம் எடுத்து அனுபான விசேஷத்தில் வைத்துக் கொடுத்து வர சன்னி பாதந் தீரும். இச்சாபத்தியம் வைக்கவும்.

விசைய வயிரவ ரசம்

இரசம், காசி, தங்கபற்பம், நாகபற்பம், அப்பிரகம் இவைகள் சமன் கூட்டி கல்வத்தில் போட்டு திரிகடுகு சூரணத்தால் ஒருநாளரைத்து வாரியெடுத்து வச்சிர மூசையில் வைத்து சீலைமண் செய்து வாலுகா யெந்திரத்தில் வைத்து இரண்டு சாமம் எரித்து ஆங்க சீதளமாக

ஆறவிட்டெடுத்து மருந்தையெல்லாம் வாங்கி
கல்வத்தில் போட்டு நாய்ப்பிச்சு வார்த்-
தரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு
கடலை பிரமாணமெடுத்து இளநீரில்
கொடுத்து வர அனந்தாதக சன்னி தீரும்.

ஜெகசேந்திர வயிரவ ரசம்

இரசம், கெந்தகம், வெண்காரம்,
நாகபஸ்பம், வங்கபஸ்பம் இவைகள்
அமன்கூட்டி கல்வத்தில் போட்டு
திரிபலைக் கஷாயத்தில் இரண்டுநா-
ளரைத்து ~~வாரி~~யெடுத்து சீலையில்
போட்டு ஒரு பொட்டணத்தில் திரி
பலைக் கஷாயம் வார்த்து இந்த
மருந்தை தோலாந்திரமாகக் கட்டி
ஒரு சாமம் சிறு தீயாக எரித்து சாங்க
சீதளமாக ஆறவிட்டெடுத்து மருந்-
தெல்லாம் வாங்கி கல்வத்தில்
போட்டு பன்றிப் பிச்சு வார்த்தரைத்
தெடுத்து வைத்துக் கொண்டு
வேளைக்குக் குன்றிப் பிரமாண
மெடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுத்துவர
கரணிச் சன்னி தீரும். இச்சாபத்தியம்
வரவும்.

சிங்கார வயிரவ ரசம்.

27. தாம்பிரபஸ்பம், லோகபஸ்பம்,
சித்தி மெய்யாச்சாரம், ரசம் யிவைகளை
சமன் கூட்டி கல்வத்தில் போட்டு
பஞ்சகோணக் கஷாயம் வார்த்து ஒருநா-
ளரைத்து ~~வழி~~யெடுத்து சீலையில்
போட்டு ஒரு ~~தோண்டியில்~~ [பாண்டத்தில்] பஞ்சகோணக
கஷாயம் வார்த்து இந்த மருந்தை
தோலாந்திரமாகக் கட்டி ஒருசாம
மெரித்து இறங்க சீதளமான ஆறவிட்-
-டெடுத்து மருந்தெல்லாம் வாங்கிக்
கல்வத்தில் போட்டு கோழிப்பச்சு
வார்த்தரைத்து எடுத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு ரெண்டு
உளுந்து பிரமாண மெடுத்து தேனுந்
திப்பிலியுமாகக் கூட்டிக் கொடுக்கவா
தசன்னி தீரும்.

பூரண வயிரவ ரசம்.

மனோசிலை, தாம்பிரபற்பம் யிவை-
-களை சமன் கூட்டி கல்வத்தில்
போட்டு சிறுவழுதிலம்பழச்சாறு
வார்த்தொருநா ளரைத்து மிளகு போலே

மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வச்சிர
மூசையில் வைத்து சீலைமண் செய்து
வாலுகா யெந்திரத்தில் வைத்து புடத்தில்
மூன்றுசாம மெரித்து சாங்க சீதளமாக
ஆறவிட்டெடுத்து மருந்தெல்லாம்
வாங்கி கல்வத்தில் போட்டு பசுவின்
பிச்சு வார்த்தரைத்து எடுத்து வைத்துக்
கொண்டு வேளைக்கு கடலைப்பிரமாணம்
யெடுத்து இளநீரில் கொடுத்து வர
சித்த வப்பாறுமை சின்னி தீரும்.

இரசமாணந்த வயிரவ ரசம்

வெண்காரம், சாதிலிங்கம், கெந்தகம்,
ரசம், அரிதாரம், லோகபற்பம், தாம்பிர-
பற்பம், வங்கபற்பம், நாகபற்பம்
இவைகள் சமன் கூட்டி கல்வத்தில்
போட்டு திரிபலாச்சாறு வார்த்தரைத்து
வாரியெடுத்துச் சீலையில் கட்டி ஒரு
பாண்டத்தில் திரிகடுகு கஷாயம் வார்த்து
இந்த மருந்தை தோலாந்திரமாகக் கட்டி
ஒரு நாள் சிறுதீயாக யெரித்து சாங்க
சீதளமாக ஆறவிட்டெடுத்து மருந்தெல்லாம்
வாங்கி கல்வத்தில் போட்டு பாம்புப்பிச்சு

வார்த்தரைத்து யெடுத்து வைத்துக் கொண்டு
அ. வேளைக்கு குன்றி பிரமாண மெடுத்து
அனுபான விசேஷத்தில் வைத்துக்
கொடுத்து வர தீராங்க சன்னி தீரும்.

மஹோ வயிறு வரசம்

சுத்தி யெச்சாரம், சத்திக்காரம்
பஞ்சலவணம், தாம்பிர பஸ்பம், இரசம்
இவைகள் சமன் கட்டி கல்வத்தில்
போட்டு எருக்கம் வேர் கஷாயம் வார்த்து
மூன்று நாட்களரைத்து ~~வார~~ யெடுத்து
வச்சிர மூசை சட்டியில் வைத்து மூடி
சீலைமண் செய்து வாலுகா யெந்திரத்தில்
வைத்து மூன்று ஜாம மெரித்து சாங்க
சீதளமாக ஆறவிட் டெடுத்து மருந்தெல்லாம்
வாங்கி கல்வத்தில் போட்டு கழுதைப்
பிச்சு வார்த்தரைத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு உளுந்து பிரமாண மெடுத்து
தேனில் கொடுத்து வர திரந்திரிக சன்னி
~~மே வரும்~~. தீரும்

கலியாண வயிறு ரசம்

இரசம், பாம்பு நஞ்சு, கெந்தகம், சிங்க-
பற்பம், வங்கபற்பம், திப்பிலி யிவைகள்
சமன் கட்டி கல்வத்தில் போட்டு

சித்திர மூலக் கஷாயம் வார்த்து ஒருநா-
ளரைத்து கிளிக்கை பண்ணி ஆறவைத்து
வச்சிர மூசை சட்டியாய் வைத்து
சீலைமண் செய்து வாலுகா யெந்திரத்தில்
வைத்து ஒருநாளெரித்து சாங்க சீதள-
-மாக ஆறவிட்டெடுத்து மருந்தையெல்லாம்
வாங்கி கல்வத்தில் போட்டு மீன்
பித்த வார்த்தரைத்து எடுத்து வைத்துக்
கொண்டு வெள்ளைக்கு கடலை பிரமாணம்
எடுத்து அநுபான விசேஷத்தில் கொடுத்-
-து வர ~~கர்ணிகை~~ கரிணிகை அன்னி தீரும். ~~இச்சை~~ இச்சை
பத்தியம் - பால் சக்கரையும் கரும்புந்
~~தின்னக்~~ கொடுக்கவும்.

விதர்ண வயறு ரசம்.

இரசம், தாம்பர பஸ்பம், வங்க பஸ்பம்,
கெந்தகம் யிவைகள் சமனெடுத்து
கல்வத்தில் போட்டு மீன்பித்த வார்த்த-
-ரைத்து எடுத்து வைத்துக் கொண்டு
வெள்ளைக்கு கடலை பிரமாண மெடுத்து
அநுபான விசேஷத்தில் கொடுத்து வர
~~கர்ணிகை~~ கரிணிகை அன்னி தீரும். ~~இச்சைக்கு~~ இச்சை பத்தியம்-
புழுங்கலரிசி கஞ்சி ~~காய்ச்சி~~ ~~வார்க்கவும்~~ உண்ணவும்.

சன்னி பாத உபயோக ரசம்.

இரசம், நாபி, அப்பிரகம், நாகபஸ்பம்
வெண்காரம் இவை சமன் எடுத்து கல்வத்-
-தில் போட்டு ஆவலம்பால் வார்த்து
28. ஒருநாளரைத்து வாரியெடுத்து சீலையில்
கட்டி ஒரு பாண்டத்தில் ஆவலம்பட்டைக்
கஷாயம் வார்த்து இந்த மருந்தை தோலந்-
-திரமாகக் கட்டி ஒருநாளெரித்து சாங்க
சீதளமாக ஆறவிட்டெடுத்து மருந்தெல்-
-லாம் வாங்கி கல்வத்தில் போட்டு
மீன் பித்து, மயில் பித்து, கிடாப் பித்து
இவைகளின் வகைக்கொருநாள் வார்த்-
-தரைத்து எடுத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு குன்றிரண்டு பிரமாண
மெடுத்து திப்பிலிக் கஷாயத்தில் வைத்துக்
கொடுத்து வர ருத்திர சன்னி தீரும்.

காருண்ணிய உபயோக ரசம்.

இரசம், அப்பிரகம் இவை சமன் எடுத்து
கல்வத்தில் போட்டு கரிசலாங்கண்ணிச்
சாறு வார்த்தரைத்து வாரியெடுத்து வச்சிர
மூசையில் வைத்து மூடிச் சீலைமண்
செய்து வாலுகா யெந்திரத்தில் வைத்து
ஒருநாளெரித்து சாங்க சீதளமாக ஆற-
விட்டெடுத்து மருந்தெல்லாம் கல்வத்தில்
போட்டு காட்டுப்பன்றி பித்தும் மயில்பித்தும்

வார்த்தரைத் தெடுத்து வைத்துக் கொண்டு வேளைக்கு உளுந்து பிரமாண மெடுத்து அனுபான விசேஷத்தில் வைத்துக் கொடுத்து-வர பிரலாப சன்னி தீரும்.

சித்த வயிறு ரசம்

அரிதாரம், இரசம் யிளை சமன் கூட்டி கல்வத்தில் போட்டு ~~கத்தாழைச்~~ கற்றாழை சாறு வார்த்தரைத்து வாரியெடுத்துச் சீலையில் கட்டி ஒரு ~~தொண்டியில்~~ பாண்டத்தில் ~~கத்தாழைமடல்~~ கற்றாழை சாறு வார்த்து இந்த மருந்தை தோலாயெந்-திரமாகக் கட்டி ஒரு சாமம் எரித்து சாங்க-சீதளமாக ஆறவிட்டெடுத்து மருந்தெல்லா-மெடுத்து கல்வத்தில் போட்டு மீண்டிச்சு வார்த்தரைத்து எடுத்து வைத்துக் கொண்டு பிரமாண-வேளைக்கு இரண்டு கடலை பிரமாண-மெடுத்து அனுபான விசேஷத்தில் கொடுத்து... ...... திப்பிலி பொடி கூட்டி கொடுத்து வர சிம்ம சன்னி தீரும்.

அ. ~~காங்கண்ணிய~~ ~~குபான~~ க.பான வயிறு ரசம்.

இரசம், பெருங்காயம், ~~திக்கி~~ வெளுச்சாரம் யவாச்சாரம் ..... ; ...சுக்காரம், திரிகடுகு கெந்தகம், பஞ்சலவணம், சித்திர மூலப்பட்டை,

மாவிலிங்க வேர்ப்பட்டை, எருக்கம்-
வேர்ப்பட்டை, மருள்கிழங்கு, மிளகர-
-ணைக் கிழங்கு, ... க்காய்ப் பருப்பு
நாவற்காய்த்தோல், நெல்லிப் பருப்பு
நாபி இவை சமன் கூட்டி கல்வத்தில்
போட்டு எருக்கம் வேர் கஷாயம் வார்த்-
-தரைத்து வில்லையடுத்து வச்சிர மூசையில்
வைத்து மூடி சீலைமண் செய்து வாலுகா
யெந்திரத்தில் வைத்து சிறு தீயாக நாலு
சாமமெரித்து சுயாங்க சீதளமாக ஆறவிட்-
-டெடுத்து மருந்தென்னாங் கல்வத்தில்
போட்டு நாய்ப்பிச்சு வார்த்தரைத்து
வேளைக்கு குன்றிப்ரமாணம் எடுத்து
இளநீரில் கொடுத்துவர அக்கினியாச-
சின்னி தீரும். பத்தியம் - தயிருஞ்
சோறுமாகக் கொடுக்கவும்.

பூத வயிரவ ரசம்.

அப்பிரகம், தாம்பிர பஸ்பம், ரசம்,
கிராபி, கெந்தகம் யிவைகள் சமன்
கூட்டி கல்வத்தில் போட்டு எருக்கன்
கஷாயம் வார்த்தரைத்து வில்லையெடுத்து
வச்சிர மூசையில் வைத்து மூடி
சீலைமண் செய்து வாலுகா யெந்திரத்தில்
வைத்து சிறு தீயாக நாலு சாமமெரித்து

சாங்க சீதளம் ஆறவிட்டெடுத்து
மருந்தெல்லாம் கல்வத்தில் போட்டு
அரைத்தெடுத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு உளுந்து பிரமாணம்
அனுபான விசேஷத்தில் வைத்துக்
கொடுத்து வர தோஷ சுரங்கள், சன்னி
வாதந் தீரும்.

மகாவயிரவ ரசம்

இரசபற்பம், தாம்பிரபஸ்பம், லோக-
பஸ்பம், அப்பிரகபஸ்பம், காந்தபஸ்பம்
இவைகள் சமன் எடுத்து கல்வத்தில்
நெருப்பனைச் சாறு வார்த்தரைத்து
~~வாரி~~யெடுத்து வனையல் குப்பியி-
லடைத்து முழுச்சீலைமண் ஏழு
செய்து வாலுகா யெந்திரத்தில் வைத்து
ஒருநாளெரித்து சாங்க சீதளமாக
ஆறவிட்டெடுத்து மருந்தெல்லாம்
வாங்கி கல்வத்தில் போட்டு பன்றிப்
பித்த வார்த்து ஒருநாளரைத்து வேளைக்கு
29 குன்றி பிரமாண மெடுத்து அனுபான
விசேஷத்தில் வைத்துக் கொடுத்து வர
சன்னி பாத சுரங்கள் தீரும்.

சிங்கார வயாரவ் ரசம்.

சாதிலிங்கம், கசாபி, மிளகு, திப்பிலி, வெண்காரம் இவைகள் சமன் எடுத்து எலுமிச்சம்பழச் சாறு வார்த்து மூன்று நாட்களரைத்து ~~வாசியை~~யெடுத்து சீசையில் போட்டு ஒரு ~~[illegible]~~ பாண்டத்தில் எலுமிச்சம்பழச் சாறு வார்த்து யந்த மருந்தை தோலாயந்திரமாகக் கட்டி ஒரு சாம மெரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து வைத்துக் கொண்டு தேனைக் குழைந்து பிரமாணமெடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுத்து வர சன்னி பாதங்கள், அதிசாரம் இவை தீரும்.

காச வயாரவ ரசம்.

அதிதாரம், கெந்தகம், அப்பிரகம், சயாந்தரசம், வெண்காரம், திரிகடுகு, சவணம், மிளகு இவை சமன் எடுத்து கல்வத்தில் போட்டு ஜீரணமாக அரைத்து ~~வாசி~~யெடுத்து சீசையில் போட்டு கட்டி ஒரு தொண்டியாலே எலுமிச்சம்பழச் சாறு வார்த்து யந்த மருந்தை தோலாயந்திரமாகக் கட்டி ஒருநாளெரித்து சாங்க சீதளமாக

ஆறுவிட் டெடுத்து மருந்தெல்லா
மெடுத்து கல்வத்தில் போட்டு மீன்
பித்தம் முயல் பித்தம் பன்றிப் பித்தம்
கடாப்பித்தம் ஆமைபித்தம் வார்த்தி-
-ரைத்து யெடுத்து வைத்துக் கொண்டு
வேளைக்கு 2 குந்துமணி யெடுத்து
இஞ்சிச் சாற்றை கொடுத்து வர சன்னி
பாத அரங்கள் தீரும்.

இந்த வயாத்வரதம் பதினெழுக்கும்
பெயர். - பூதவயாத்வரதம், விசைய-
வயாத்வரதம், சௌச்சேந்திர வயாத்வரதம்
சிங்கார வயாத்வரதம், ஜன வயாத்வ-
ரதம், மாணந்த வயாத்வரதம் சித்த
வயாத்வரதம், காருண்ணிய வயாத்வ-
ரதம், கபால வயாத்வரதம், மகா வயாத்வ-
ரதம், கால வயாத்வரதம், மனோ-
வயாத்வரதம், கலியாண வயாத்வரதம்,
வித்தார வயாத்வரதம், சன்னி பாத-
வயாத்வரதம், மகாபூத வயாத்வரதம்
அ. இந்த பதினேழு வகையும் பதிமூன்று
சன்னிக்கு இதுவே அவிழ்தமென்று
சொல்லுமே

வயாத்வரதம் முற்றும்.

அதிசாரா மேக.....

.....வணம், அப்பிரகம், கெந்தகம்
தாளகம், மனோசிலை, மயில்துத்தம், பால்துத்தம்
நேர்வாளம், சீராபி, வெண்காரம், சாதிலிங்கம்
சத்திக்காரம் யிவை சமன் கூட்டி யிதுக்குச்
சமன்..... யிவையெல்லாம் கூட்டி
கல்வத்தில் போட்டு இலுப்பை நெய்
னவையெல்லாங் கூட்டி கல்வத்திற் போட்டு இஞ்சிச்சாறு வார்த்து ஏழு நாட்-களரைத்து கொடி மாதளம் பழச்சாற்றி-லொரு நாளரைத்து, எலுமிச்சம்பழச்சாற்றி-லொரு நாளரைத்து யிப்படி அரைத்து தீர்த்த பிறகு நீபாய் போலே மாத்திரை பண்ணி நிழலுலர்த்தி யெடுத்து பரணியாலடைத்து வைத்துக் கொண்டு ~~யிதுக்கு~~ இதற்கு அனுபானம் தேன், திப்பிலி, ஆடாதொடை யிலைச்சாறு, இஞ்சிச்சாறு, இக்கு கியாழம் இன்னமு மந்தந்த ரோகங்களுக்குத் தக்கன அனுபா-னத்திலே வைத்துக் கொடுத்துவர தீரும் வியாதிகள் - அக்கினி மாந்தம், ~~அஜீ~~ ரவை ஜீரணம், க்ஷயம், ~~அப்பியாசர்த்தம்~~ அபஸ்மாரம், சுரவெ-வாந்தி, சர்க்கரைத்தி விடுவெதுப்புகள், ~~இந்த~~ தேக-புண்டி, அபஸ்மாரத்தி பரிகோரம், நரை, திரை மோகம். அவோசுகாசம், மூத்திரக்-கிரிச்சிரம், இரத்தகாசம், இரத்தக்ஷயம், இரத்தப் பயித்தியம், எண்பது வாதம், கர்ப்ப-விப்புருதி, பதினெட்டு வகைச் சூலை, பாண்டுவம், கிராணி, இரத்த அதிசாரம், மேகம் இருபது ~~வகை~~ வகையும் பீலிகை வாதம், நீராமை, கல்லடைப்பு, தண்ணீர்தாகம், சோகை, மூளையல் பிறக்கிற வியாதிகள்,

அசனத்தில் பிறக்கின்ற வியாதிகள், இருபத்தெட்டு வகைச் சுரம், அறு வகை மேகம் இவைகளெல்லாந் தீரும். இதுவும் சாத்தியம் அசாத்தியம். ரோகங்களுக்கு வைத்துக் கொள்ளவும்.

கிராணிக்கப்பட்ட மாத்திரை

மாதளம் பழத்தோல், அதிவிடையம், வட்டதிருப்பி, கோரோசனை ..., சிறு-
நாகப்பூ, இலவம் பிசின், பெருமரப்பட்டை,
ஆற்றுக்கம்பூ, மாசிக்காய், சீரகம், சாதிக்-
காய், சாதிபத்திரி, இலவங்கம், வெப்பிலைக்
விளாம்பழம், வில்வபத்திரிப்பழம், கர்க்கடக-
16. சிங்கி, வெட்பாலைப் பட்டை, வெட்-
பாலையரிசி யிவையெல்லாஞ் சமபாகம்
பண்ணிக் கொண்டு வந்து பிழித்து சூரணம் பண்ணிக் கொண்டு மாதளங்காய்க்
கியாழம் வார்த்தரைத்து வழித்து அடையாகத் தட்டி பூவரசிலையில் பொதிந்து சட்டியை அடுப்பில் வைத்து காயச் செய்த அடையைப் போட்டு வேக விட்டு திருப்பிப் போட்டு மாத்திரை வெந்தபிறகு வைத்துக் கொண்டு திரட்டி நிழலிலுலர்த்தி கிராணிக்கு அனுபானம் - திப்பிலித் தூளுந் தேனுமாக ஒரு மாத்திரை யிட்டு கொடுக்கவும். அல்லது

கிராணிக்கு கியாழத்திலாவது கருக்குக் கியாழத்தி-
-லாவது வெந்நீரிலாவது இப்படி அநுபான
தாசேநுத்ரி ஒரு மாத்திரை யிட்டு வரத்
தீரும் வியாதி — கிராணிக்கழிச்சல், மூலக்-
கிராணி, அமர் அதிசாரம், அசீரணக் கழிச்சல்,
இரத்தக் கழிச்சல், சீதக்கழிச்சல், அதிசார-
மிருபத்தொரு வகையுந் தீரும்.

சஞ்சீவ ரச மாத்திரை

அத்தி செய்யாத தாளகம் பலம்-1 கல்வத்தில்
போட்டு அத்தியிலைச் சாறு வார்த்து அந்த
நாட்களரைத்து பிறகு முலைப்பாலில்
அத்தி பண்ணி யாகலிங்கம் பலம்-1
கூடக் கல்வத்தில் போட்டு அந்த நாட்க-
-ளரைத்து பிறகு கலைமான் கொம்பு
சந்தனம் - பலம்-1 கூடப் போட்டு அந்த
நாட்களரைத்து பிறகு சுக்கு, திப்பலி,
மிளகு பாவைகாய் வகைக்கு பலம்-1
சூரணம் செய்து கூடப் போட்டு அந்த
நாட்களரைத்து பிறகு வெள்ளைச் சாறு
தேவனை யிலையை யரைத்த விழுது பலம்-2
~~[illegible]~~ கூடப்போட்டு அந்த நாட்க-
ளரைத்து இப்படி அரைத்து தீர்ந்த பிறகு
கடலை பிரமாண மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி
வைத்துக் கொண்டு அநுபான விசேஷத்தில்

இரு மாத்திரை யாட்டுவரத் தீரும் வியாதி-
சுரம் அறுபத்து நாலு வகையும் சன்னி
பதின்மூன்று வகையும் தோஷமெழு வகையும்
குளிர் அருமாறு வகையும் ஐயமும் பதினொரு
வகையும் அஜீரணம் நாலு வகையும்
அ. பக்கசூலை, அக்கினிமாந்தம் யிவை
முதலான ரோகங்கள் தீரும்.

அருமாத்திரை

அத்திசெய்த நாகம் - பலம் 1 கல்வத்தில் போட்டு எலிபாகலிலைச் சாறு வார்த்து இருபத்தொரு சாமம் அரைத்து பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு யிவைகள் வகைக்கு பலம் 1 சூரணம் செய்து போட்டு எலி-பாகலிலைச் சாறு வார்த்து எட்டுசாம-மரைத்து பிறகு மிளகு போலே மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுபானம் - நெட்டை பேய்மிரட்டி யிலையும் வாதன் முன்னி யிலையும் துளசியிலையுமாகச் சமன் கூட்டி புட்டுக் கட்டி வேகவைத்து சாறுபிழிந்து கொண்டு இந்தச் சாற்றின் சீரகம், லவங்கம், சுக்கு யிவைகள் வகைக்கு காசெடை பொரித்து அந்தச் சாறு வார்த்தரைத்து மாத்திரை

ஒன்று கூட வைத்து அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும். இதுக்கு கந்தக காச்சி வார்த்து வரவும். அதீரண சுரம், வாதசுரம், சிலேட்டும சுரம், சன்னி தோஷம், குளிர்சுரம் யிவை-யெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் கிரமத்தோடே வரவும்.

சுர அங்குச மாத்திரை

சாதிலிங்கம் - பங்கு-1, நேர்வாளப்பருப்பு - பங்கு-2, கடுகுரோகணி - பங்கு-3 யிந்த மூன்று வகையுந் அத்தி ரையசு கல்வத்தில் போட்டு கரிசலாங்கண்ணிச் சாறு வார்த்த-ரைத்து குன்றிப் பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச்சாறுபானத் அக்கு, திப்பிலி, மிளகு, சீரகம் யிவைகள் வகைக்கு காசிடை எடுத்து வெந்நீர் வார்த்தரைத்து மாத்திரை ஒன்று கூட வைத்து அரைத்துக் கரைத்துக் கொடுக்க மலசுத்த சுரமும் விடும். மல சுத்தியமாம். வாதசுரம் விடும்.

வாதரசன மாத்திரை

நேர்வாளப் பருப்பு வேண்டியமட்டெடுத்து உள் முளையை எடுத்துப் போட்டு பசுவின் சாணியின் பதித்து உள்ளையாகத் திரட்டி

கும்பா நெருப்பில் வேகப் போட்டு எடுத்து
உடைத்து பருப்பெல்லா மெடுத்து சீலையில்
முட்டை கட்டி பாணக்கத்திலும் கைத்-
தாழை மடல் சாற்றிலும் பசுவின் பாலிலும்
வகைக்கொரு சாமம் தோலாந்திரமாக
77. வேகவைத்தெடுத்து உரித்து பசுவின்
நெய்யில் பொரித்தெடுக்கச் சுத்தியாம்.
இந்தப் பருப்பும் திரிகடுகம் ஆமணக்கம் பூவும்
கருங் கோரைக்கிழங்குமாகச் சமன் கூட்டி
கல்வத்தில் போட்டு கத்தாழை மடல்
சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாணம்
மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வைத்துக்
கொண்டு ஒரு மாத்திரையை பொடி செய்து
சக்கரையுடன் கலந்து கொடுத்து
இரண்டு நாழிகை பொறுத்து வெந்நீர்
கொடுத்து வர பேதியாம். போதுமென்று
கண்டால் கைகால் சுத்தி பண்ணிக்
கொண்டு மோருஞ் சோறுமாகச் சாப்பிட்டு
வர ~~[illegible]~~ ம். பேதி நிற்கும்.

சுதபத்திர மண்டூர மாத்திரை

வைகுநாரப்பட்ட பழஞ்சிட்டங்கள் -
100 கொண்டு வந்து, யாந்தக்கள் சுத்தி
செய்யும் வகை - தாணியினையும் தாணிப்
பட்டையுந் தாணிவேருஞ் சமனமாய்க்
கொண்டு உரலில் போட்டு தண்ணீர்

தெளித்து பொடித்து சாறு பிழிந்து கொண்டு
திட்டக் கல்லை குழியான உரையில்
வைத்து சிவக்கக் காய்ச்சி யெடுத்து அந்தச்
சாற்றில் போடவும். இப்படி ஏழுதரங்
காய்ச்சி ஏழுதரந் தோய்த்து எடுக்கவும். மறுகால்
பசுவின் கோமியத்திலும் ஏழுதரங் காய்ச்சி
ஏழுதரந் தோய்த்து எடுக்கவும். பசுவின்
மோரிலும் இப்படி செய்த பிறகு பாந்த
ஸஞ்ஜீவனையில் இருபத்தொரு தரங்
காய்ச்சித் தோய்க்கவும். இப்படி சுத்தி
செய்த கல்லுக்கு கூட்டு மருந்துகள் -
சித்திரமூலம், வேம்பின்னை, நொச்சிவின்னை,
பிரண்டை, தொட்டைக் கரந்தை
வெள்ளைச் சாறு, வெள்ளைச்சாரணை,
கருவேப்பிலை, சங்கம்பட்டை, கருத் -
தகாளி, கொடிமாதளங்காய் விதைகள்
வகைக்கு பலம் - 2 அத்தி செயநீர்
மை சாற்றி, இந்துப்பு - பலம் - 10, மினிகு -
பலம் - 5, கடுக்காய்த் தோல் - பலம் - 10,
சீரகம் - பலம் - 10, கல்லுப்பு - பலம் - 1
வளையலுப்பு - பலம் - 1, சயாந்தலவணம் -
பலம் - 1, வெங்காரம் - பலம் - 1 யிவை -
யெல்லாவற்றையும் கொண்டுவந்து இடித்து சூரணம்
செய்து கொண்டு திட்டக் கல்லை
பொடித்து சூரணம் செய்து கொண்டு
மைசாட்டி இந்துப்பு வேறே பொடியாய்ச்
சூரணம் செய்து கொண்டு பாந்த ஸஞ்ஜீவனைச்

அ ஸ்ரீநண்டுரும் உடக்கலந்து பசுவின் நெய்யால்
வார்த்துப் பிசறி பத்து நாழிகை ஊறவைத்-
தெடுத்து கல்வத்தில் போட்டு இஞ்சிச்சாறு-
படி-1 வழுதிலைச்சாறு-படி-1, கரிசிலாங்-
கண்ணிச்சாறு படி-2 வல்லாரையிலைச்-
சாறு-படி-2, நீர்முள்ளியிலைச் சாறு-
படி-2 யாகச் சாறுகளை வார்த்து அந்த
நாட்களரைத்து கொட்டைப் பாக்கு
பிரமாணம் மாத்திரை உருட்டி நிழலுலர்த்தி
~~[illegible]~~ கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்குப் பாதி மாத்திரை - திப்பிலி,
லவங்கம், அக்கராகாரம் இவைகளைப்
பொரித்து பொடிசெய்து உடக்கலந்து
தேனில் கொடுக்கவந்தத் தீரும் வியாதி - வாத-
பாண்டுவும், ஐயப் பாண்டுவும், பித்த-
பாண்டுவும், ஊது பாண்டுவும், உதிர-
பாண்டுவும், பாண்டுவும், மகோதரம்
வீக்கத்திமிர்களி, காமாலை, ஊது-
காமாலை, சோகை, வாதேந்திசன்னி,
வீக்கங்கள், மஞ்சக்காமாலை, காமா-
-லையோடு உடனதெல்லாம் தீரும்.

சூதிகா வாய்வுக்கு சாம்பிராணி மாத்திரை.

சாம்பிராணி பலப்பம் - பங்கு-1, கோரோ-
-சனம் பங்கு-1, லவங்கம் - பங்கு-2,

திப்பிலி - பாங்கி - ௧, அக்கராகாரம் - பாங்கி ௧
யிவையெல்லாம் பொடிசெய்து கல்வத்தி
லிட்டு வெந்நீர் விட்டரைத்து குன்றி
பிரமாண மாத்திரை திரட்டி ~~நிழலில்வைத்து~~ நிழலிலுலர்த்தி
~~வைத்துக்~~ கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு ஒரு மாத்திரை தேனிலாவது
சர்க்கரையிலாவது கொடுத்து வரத் தீரும் வியாதி
சுக்கில வாய்வு, சுக்கில சுரம், சுக்கில சன்னி
சுக்கில க்ஷயம், கெர்ப்பசூலை, கெர்ப்ப-
வாய்வு, பக்கசூலை அக்கினி மாந்தம்
யிவையெல்லாந் தீரும். ~~[illegible] தைலத்தில்~~ [illegible] வெற்றிலை
சாற்றில் கொடுத்து வர ரோக சன்னி, சன்னி
13 வகையும் தோஷங்களும் தீரும்.

? சோம அக்கினி குமார மாத்திரை

நாலு சூதம் சிலைரண்டு
நல்ல கெந்தகம் நாலிரண்டு
கால் காந்த மதுக்கிரட்டி
கலைசேர் லோக மதுக்கிரட்டி
ஏலங் குடிலா யிவையைந்தும்
யிடித்தே குமரிச் சாற்றதனால்
தானந் தன்னி லவையீராய்
18. தனலா யெரியங் கண்டீரே.

அஜீரணம் நீராமை பக்கவிசை
கலக்கவிசை சொண்டா விஷசீசாத்தி
நான்
குணமாஞ் சொன்னோம் இருவாறு
மண்டூ... மனோர் வந்திடினு
மிகவுங் கேழ்க்கக் கழிவாமே.

சிங்கிலிக்க மாத்திரை.

சிங்கிலிக்கம் வேண்டியது கொண்டு வந்து கல்வத்தில் போட்டு இளிர்ந்த தண்ணீர் விட்டு மூன்றுநாட்களரைத்து இதற்கு பரிபாகம் - அக்கி, திப்பிலி, மிளகு சமன் கூட்டி சூரணம் பண்ணி யாங்கி -லிக்கம் பங்கு-1, சூரணம் பங்கு 3 கூட்டப்போட்டரைத்து இன்று பருமாண மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுபான விசேஷத்தி லொரு மாத்திரையிட சர்வ சுரங்களும் விடும்.

வாதசஞ்சீவி மாத்திரை

அக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காயி தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, தேவதாரு கொக்கை, அரத்தை, செங்கழுநீர்க் கொழுந்து

கடுகுரோகணி, கோரோசனை,
கரிப்பானை வேர்ப்பட்டை, கெந்தகம்
வெண்காரம் யிவை சமன் கூட்டி யிடித்து
சூரணம் ~~பண்ணி~~ செய்து கல்வத்தில் போட்டு
தெசமூலக் கியாழம் வார்த்து மூன்று சாமம்
அரைத்து குன்றி பிரமாண மாத்திரை திரட்டி
நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுபான
விசேஷத்தில் கொடுத்து வர வாதசுரம்
பித்தசுரம், சிலேட்டுமசுரம் சர்வ சுரங்களும்
விடும். அசீரணம், அதிசாரம், இருமல்
இவையெல்லாந் தீரும்.

காமாலைக்கு மாத்திரை.

மிளகு, சுக்கு, மிளகரணைப் பட்டை
வெள்ளுள்ளி, வசம்பு, கருஞ்சீரகம், வாய்-
விளங்கம், துவரைப் பொட்டு, வெந்தயம்,
இந்துப்பு, காந்தம், ஏலம், கிட்டக்கல்
அரப்பொடி யிவைகள் வகைக்கு பலம்-1
சேர்த்திடித்து சூரணம் பண்ணி சட்டியில்
போட்டு கரிசலாங்கண்ணிச் சாறு
வார்த்துப் பகல் முப்பது நாழிகை யூற
வைத்து யெடுத்தரைத்து கொட்டைப்பாக்கு
போலே மாத்திரை திரட்டி ~~நிழலுலகத்~~ நிழலிலுலர்த்தி
வைத்துக் கொண்டு அந்தி சந்தி வெண்ணெய்க்

ஒரு மாத்திரை கொடுத்து வர காமாலை பாண்டுவும் அக்கினிமாந்தம் யிவைகள் தீரும். ~~இந்த~~ பத்தியம் - அப்படிவைக்கவும்.

மேகத்துக்கு கோரோசனை மாத்திரை.

அதிமதுரம், செஞ்சந்தனம், சீரகம், கோரோ-சனை யிவைகள் சமன் கூட்டி கல்வத்தில் போட்டு இளநீர் விட்டு யாமம் அரைத்து மிளகு போலே மாத்திரை திரட்டி ~~நிழலுலர்த்தி~~ நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு முலைப்பாலி லொரு மாத்திரை யிட்டு வர குடிசப்பட்ட ரோகங்கள் விடும்.

இளவழ சிறுகீரை வேரரைத்து எலுமிச்சம்பழம் அளவெடுத்து ~~முன்~~ முந்து மாத்திரையுங் கூட வைத்துக் காடியின் கரைத்துக் குடித்து வரத் தீரும் வியாதி - மேகம், நீர்ச்சுருக்கு சீழ்மேகம், இறைச்சி கழுவின நீர் போலே விழுகிறது ~~[illegible]~~ தீரும், வெண்பள்ளை-களுக்கு மாதவிடாய் மாதம் தண்ணீரும் வெப்புத் தண்ணீர் போலே விழுகிறதும் இறைச்சி கழுவின தண்ணீர் போலே விழுகிறதும் நீர்க்கடுப்பு, நீர் முக்கத்தில் கல்லடைப்பு யிவை யெல்லாந் தீரும்.

மூலக்கழிச்சலுக்கு மாத்திரை

சுக்கு, திப்பலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, கொடிவேலிவேர் வாய்விளங்கம், கல்லுப்பு, எள், செங்கழுநீர் கோஷ்டம் இவைகள் சமன் எடுத்து யிடித்து சூரணம் பண்ணி கல்வத்திலே போட்டு கடுக்காய் கியாழம் வார்த்தரைத்து இலந்தைக்காய் போலே மாத்திரை திரட்டி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வெந்நீரில் வேளைக்கொரு மாத்திரை கொடுத்து வரத் தீரும் வியாதி - மூலக்கழிச்சல் சலக்கழிச்சல், இரத்தக்கழிச்சல், இரத்தமூலம் அஜீரணம், சீழ்மூலம், மூலவாய்வு அக்கினி- மாந்தம், சிலேட்டும வாய்வு, சிறுசிரங்கு யிவையெல்லாந் தீரும்.

மேகத்துக்கு ஊதுவாதி மாத்திரை

சுக்கு, திப்பலி, மிளகு, காசுக்கட்டி வெல்லம் வகைக்கு பலம்-8, அபின்மருந்து வராகனிடை - 3 யிவையெல்லாம் இடுவையில் போட்டு ~~யிடிக்க~~ இதற்கு சாறு - கரிசலாங்கண்ணிச்சாறு வேளைச்சாறு, தொண்ணைப்பட்டைச் சாறு
79 பாவட்டம் பழச்சாறு, ஆவாரை யிலைச்சாறு கோவையிலைச்சாறு, குப்பைமேனிச்சாறு யாந்தைச்சாறு . . . . யெல்லாஞ் சுட்ட

குடுவையில் வார்த்து எட்டுநாட்கள் ஊறவைத்து எடுத்து கல்வத்தில் போட்டு வெங்காயச் சாறு வார்த்தரைத்து நாலு குன்றிகளிடை எடுத்து மாத்திரை திரட்டி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு ஒரு மாத்திரை கொடுத்து வரவும். இப்படி இருபது நாட்கள் கொடுக்க மேகம் இருபது வகையும் தீரும்.

கொந்தளாதி மாத்திரை.

அமுக்கிராப்பழம், அக்கி, திப்பலி, மிளகு வெள்ளுள்ளி, பெருங்காயம் வசம்பு யிவை-யெல்லாஞ் சமன் கூட்டி வெவ்வேறே பொடிசெய்து வக்கக் கழுந்து கூட்டி கல்வத்தில் போட்டு சிறுதும்பைச் சாற்றி-லும் வெள்ளைச்சாறு வேளையினைச் சாற்றிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் யிப்படி வகைக்கொருநாள் வார்த்தரைத்து யிப்படி மூன்று நாட்களரைத்து கடலைப்ரமாணம் மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு யிதுக்கனுபானம் சிறுநீரிலும் சாறு வேளைச் சாற்றிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் சிறுதும்பைச் சாற்றிலும் யாவைக்கும் கொட்டு-வுரைத்து கண்ணுக்கு கலிக்கம் போட்டு உள்ளுக்குக் கொடுத்துவரத் தீரும்.

மாந்த வலிக்கு மாத்திரை.

பலகறையைக் கொண்டுவந்துடைத்து நடுச்சுழியை எடுத்துப் போட்டு மற்ற பலகறையை எடுத்து சாடியில் போட்டு ஏழுநாட்கள் ஊறவிட் டெடுத்து கல்வத்திலே போட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து வில்லை தட்டி காயப் போடவும்.

முத்து கொண்டு வந்து மூன்று நாட்கள் முலைப்பாலி லூறப் போட்டெடுத்து கல்வத்-தில் போட்டு முலைப்பால் வார்த்தரைத்து வில்லை தட்டி காயப் போடவும். பவளம் கொண்டு வந்து முலைப்பாலில் மூன்று நாளூறப் போட்-டெடுத்து கல்வத்தில் போட்டு முலைப்-பால் வார்த்து அரைத்து வில்லை தட்டிக் காயப் போடவும். [illegible] ஏமச் சூரணம் வராகனிடை - 27, பலகறைத் தூள்-வராகனிடை - 6, முத்துத் தூள் வராகனிடை-..... பவழத்தூள் - வராகனிடை - 3. அதி-
அ விடையஞ் சுட்ட சாம்பல் வராகனிடை - 13 இவையெல்லாம் கூட்டி கல்வத்தில் போட்டு வெந்நீர் விட்டரைத்து கடலை பிரமாண மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுபான விசேஷத்தில் கொடுத்து வர அசீரணசுரம், மாந்தசுரம்,

மாந்தவலிகள் சன்னி -13 வகையும் விஷதோஷங்களும் சர்வ அரோகங்களும் உப்புசம், அஜீரணம், இரைப்பு, இருமல் குன்மம், சிலேட்டும வாய்வு, அக்கினி மாந்தம் இவையெல்லாந் தீரும்.

உளுத்துகாமாலைக்கு மாத்திரை

உண்டை

காவட்டம்புல் ஒருபிடி கொண்டுவந்து அரிந்து பெரிய பானையில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்துக் காச்சி கஷாயம் இருநாழிக்கு கொண்டு பழந்-வடிகட்டிக் கொண்டு இதற்கு பழந்-திட்டாணிக்கல்லு - பலம்-4 கொண்டுவந்-நிறுத்து இரணம் பசுஞ்சாணிக் கொண்டு சுத்தி செய்து போட்டு யந்த கஷாயம் கல்வத்தில் போட்டு யந்த கஷாயம் வார்த்தரைத்து அந்தபாகு வெயடுத்து வார்த்தரைத்து போட்டுக் கரைத்துக் காச்சி கஷாயத்தில் போட்டுக் கரைத்துக் காச்சி மிருதின பாகு யெடுத்துப் பாக்குபோல மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு அந்தி சந்தி ஒருமாத்திரை தேனில் கொடுத்தால் உளுத்துகாமாலை தீரும். அக்கினி யுண்டாம். இச்சாபத்தியம் - மோர்சாதம், புளிப்புத் தவிர்த்துக் கொள்க.

சொரியாக் கிணத்துக்கு
இரப்குணாதி மாத்திரை

சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி
சீரகம், வசம்பு அட்ட சாம்பல், பெருங்காயம்
யிவை யெல்லாம் கொண்டு வந்து சமன்
எடுத்து கல்வத்தில் போட்டு இளந்தண்ணீர்
வார்த்தரைத்து பாக்களவு மாத்திரை
திரட்டி வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கொரு மாத்திரை
அரைத்து கொதிக்க வைத்து குடித்துவரத்
தீரும் வியாதி — சொரியாக்கிணம்,
~~[struck]~~ வயாறெரிச்சல், வயிறெரிவு, வயிறு-
பொருமல், புளியேப்பம், கழிச்சல், அக்கினி
மாந்தம் யிவையெல்லாந் தீரும்.

அரிதார மாத்திரை

அரிதாரம் பலம்-3 கொண்டு வந்தரைத்து
பொடி செய்து கொண்டு தண்ணீர் படாத
பசுவின் பால் அரைநாழி ஒரு பாண்டத்தில்
வார்த்து சீலை வேடு கட்டி ~~[struck]~~
80. மேலே அரிதாரப் பொடியை வைத்து
மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண்
செய்து அடுப்பில் வைத்து மெதுவா யெரித்து
வர அரிதாரப் பொடியெல்லாம் பாலிலே
இறங்கும். பிறகு இந்தப் பாலைக் காய்ச்சி

குழம்பாகும் போது இதுக்கு காற்கமருந்து-
கொடிவேலிச் சூரணம், திப்பலிச் சூரணம்
சீந்தில் சூரணம், அரப்பொடிச் சூரணம்
கடுக்காயச் சூரணம் - ஆழாக்கு, நிலாவாரைச்
சூரணம் யானை வணக்கு உழக்கி
சூரணமாகக் கூட்டி இந்தப் பால் குழம்பில்
இளநீர் பாகினை பக்குவத்தில் இறக்கி
பனைத்து இன்றி பிரமாண மாத்திரை திரட்டி
நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுபான
விசேஷத்தில் கொடுத்து வரவும். மண்டல
வியாதிகளுக்கு மூன்று மாத்திரை தேனில்
கொடுக்கவும். இப்படி ஒரு மண்டலம்
கொடுக்க மண்டை வியாதிகளும் பதி-
-னெட்டு குஷ்டரோகங்களும் தீர்ந்து பல
வியாதிகளும் தீரும். பசுவின் நெய்யில்
கொடுத்து வர விப்புருதி தீரும். பால்கஞ்சியில்
கொடுத்து வர வெப்புப் பாண்டு தீரும்.
முலைப்பாலில் கொடுத்து வர அண்ட-
வாதந்தீரும். இளநீரில் கொடுத்து வர குடல்
வாதந் தீரும். நொச்சிச் சாற்றில் கொடுத்து-
-வர வாதரோகங்கள் தீரும். ஆவின்பாலில்
கொடுத்து வர சொறி, சிரங்கு தீரும். வெட்-
-பாலைச் சாற்றில் கொடுத்து வர வாதகிரந்தி
தீரும்.

சீந்தில் சாற்றில் கொடுத்துவர சொறி-சிரங்குகள் தீரும். எருமை வெண்ணெயில் கொடுத்துவர அரிப்புகள் விடும். ஊர்க்-குருவி கொழுப்பில் கொடுத்துவர குளிர்-சுரம் விடும். கழுதை விட்டைச் சாற்றில் கொடுத்துவர மந்தக் காமாலை தீரும். இப்படி அனுபான விசேஷத்தில் கொடுத்து-வர முன் சொன்ன வியாதிகளெல்லாந் தீரும். இதற்கு பத்தியம் — உப்பு, புளிப்பு தவிர்க்க.

நீரிழிவுக்கு பிரப்பசோதி மாத்திரை

பிரப்பசோதி வேர்ப்பட்டை, யானைக்கிலிஞ்சல் அரிதாரம், மனோசிலை இந்த நாலு வகையும் சமன் கூட்டி கல்வத்தில் போட்டு பிரப்ப சோதி இலைச்சாறு பிழிந்து வார்த்தரைத்து யாப்படி என்பது நாட்களரைத்து சிறு பயறளவு மாத்திரை திரட்டி கல்வத்தில் காயவைத்துக் கொண்டு — இந்த மாத்திரையை ஒரு சோதனை பார்க்க ஒரு பானையில் ஆறு படிக்கு அது நிரம்பத் தண்ணீர் விட்டு எழுகும் போது ஒரு மாத்திரையைப் பானையில் விட அந்தத் தண்ணீர் நீரைக் கட்டும்.

தண்ணீர் ஏழுகாது. இப்படி சோதித்து
கொண்டு வைத்துக் கொள்ளவும். வெகு
நீரிழிவுக்கு ஒரு மாத்திரையை தீநகப்
பொடியுடன் பொடி செய்து சக்கரையும்
கூடக் கலந்து கொடுக்க வெகுநீரிழிவு
அந்தக் ~~சணத்தில்~~ கணத்தில் தீரும். பிறப்ப சோதி
மாத்திரை யென்றும் பெயர்.

ஏலாதி மாத்திரை

ஏலம், லவங்கம், சண்பகமொக்கு
கடைமான் கொம்பு, கோரோசனம்
அதிரசம், சாத்திரபேதி யிவைகள்
சமன் கூட்டி கல்வத்தில் போட்டு
முலைப்பால் வார்த்தரைத்து - மிளகு
போலே மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி
வைத்துக் கொண்டு முலைப்பாலிலொரு
மாத்திரையிட்டு வர தாபசுரந் தீரும்

விஷசுரக் குளிகை

இத்திர காபி - கழஞ்சு - ௨, மிளகு -
கழஞ்சு - 4, கெந்தகம் - கழஞ்சு - ௨, நாபம் -
- பிரபற்பம் - கழஞ்சு - 1 யிவைகளைக்
கல்வத்தில் போட்டு இஞ்சிச் சாற்றிலும்
எலுக்கம் பழுப்புச் சாற்றிலும் வகைக்-
கொருநாள் அரைத்து யிப்படி இரண்டு

நாட்களரைத்து குன்றி பிரமாண மாத்திரை
திரட்டி ~~நிழலுலர்த்தி~~ நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு
இஞ்சிச் சாற்றிலாவது, எருக்கம் பழுப்புச்
சாற்றிலாவது ஒரு மாத்திரை இடவும்.
யிப்படி மூன்று நாட்கள் கொடுக்க விஷசுரம்
தீரும்.

சீதசுரக் குளிகை.

இரசலிங்கம், அரிதாரம், வெள்ளைப்பாஷா-
-ணம் இந்த மூன்று வகையும் சுத்தி ~~[illegible]~~ செய்து
பொன்னூமத்தையிலைச்
சாற்றில் போட்டு ஒரு நாள் ஊறவைத்து
சாறு வார்த்து ~~மறு~~ அடுத்த நாள் சாற்றை யிறுத்து ~~போட்டு~~
~~மறுநாள்~~ முன் பொன்னூமத்தை யிலைச்சாறு
வார்த்தரைத்து குன்றி பிரமாணம் மாத்திரை
திரட்டி ~~நிழலுலர்த்தி~~ நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு
இஞ்சிச் சாற்றிலொரு மாத்திரை யிட்டு வர
சீதசுரம் விடும். ~~இதற்குப்~~ இதற்கு பத்தியம் —
முருங்கையிலை அவித்த தண்ணீர் வடித்து
மிளகு சாறு காய்ச்சி வார்க்கவும். எண்-
-ணெய் ~~[illegible]~~ தவிரவும் தவிர்க்க.

அஜீர்ண மேல் விரேசனத்துக்கு மாத்திரை

81. இரசம், கெந்தகம், நேர்வாளம், சுக்கு, திப்பலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, வெண்காரம் யிவைகளைச் சுத்தி செய்து சமன் கூட்டி கல்வத்தில் போட்டு இஞ்சிச் சாறு விட்டரைத்து குன்றி பிரமாண மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச் சாற்றிலிட்டு வர நாலு முறை பேதியாகும். சுரம் விடும். யிதன்மேல் கஞ்சி வார்க்கவும்.

சூலை அங்குச மாத்திரை

இரசம், வெண்காரம், கெந்தகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, பொன்னரிதாரம், சுக்கு, திப்பலி, மிளகு, நேர்வாளம், சூத்திரநாபி, தாம்பிரபஸ்பம், யிவைகள் சுத்தி செய்து சமன் கூட்டி கல்வத்தில் போட்டு கரிசலாங்கண்ணிச் சாறு வார்த்து முச்சாமமரைத்து குன்றி பிரமாண மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச் சாற்றி னொரு மாத்திரை யாட்டு வர அஜீரணம், சூலை, சுரம் யிவையென்லாந் தீரும்.

பித்த சயத்துக்கு அசுவகெந்தாதி மாத்திரை.

சாதிக்காய், அக்கு, மிளகு, கடுகுரோகணி, திப்பலி, தான்றிக்காய், லவங்கம், கராவல்லி, திராட்சிப்பழம், பேரீச்சம்பழம், வெட்டிவேர், விளாமிச்சம் வேர், சந்தனம், தக்கோல பொட்டு, கொத்தமல்லி, கருஞ்சீரகம், சீரகம், அமுக்கிறாக்கிழங்கு யிவைகள் வகைக்கு பலம் -1 கொண்டுவந்திடித்து சூரணம் செய்து கொண்டு யிந்தச் சூரணத்துக்கு சமன் சீக்கரை கொண்டு வந்து ஒரு சட்டியில் போட்டு தண்ணீர் விட்டுக் கரைத்து வடிகட்டி காய்ச்சி பக்குவத்தி லிறக்கி ஆறி வரும்போது சூரணத்தைக் கொட்டிக் கிளறி தான்றிக்காய் போலவே மாத்திரை திரட்டி வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும் வேளைக்கொரு மாத்திரை பசுவின் நெய்யில் குழைத்து கொடுத்து வர பித்த-க்ஷயம், இருமல், சுரம் யிவை தீரும் தேனில் குழைத்துக் கொடுத்து வர சிலேஷ்ம சுரம் வாதம் இருமல், பித்த காச மிவை-யெல்லாந் தீரும். இதற்கு பத்தியம்-முருங்கையிலைச் சாறு கூட்டிக் கொள்ளவும்.

சுவாச காசத்துக்கு வாசாதி மாத்திரை.

அ. ஆடாதோடையிலைச்சாறு நாழி பழந்த
சட்டியில் வார்த்துக் காஞ்சி நாழி யிருக்க
யாறக்கி வைத்துக் கொண்டு [illegible]
கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு,
சுக்கு, திப்பலி, மிளகு, கண்டங்கத்திரி விதை
[illegible]வாய்ச்சண்ணி விதை யிவைகள்
வகைக்கு பலம்-1 கொண்டு இடித்து
சூரணித்து யாந்தச் சாற்றில் கொட்டிக்
கிளறி தான்றிக்காய் போலே மாத்திரை
திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கொரு மாத்திரை
தேனிலாவது வெண்ணெயிலாவது
குழைத்துக் கொடுத்து வர சுவாச காசம்,
இளை, இருமல், சுரம், [illegible]றையபாண்டுவும்
இவையெல்லாந் தீரும்.

ஜுர வியாதிக்கு மாத்திரை.

கடுக்காய் - 5, சீரகம் - பலம்-1, திப்பலி -
பலம்-2, மிளகரணை வேர்ப்பட்டை -
பலம்-1, கொடிவேலி - பலம்-1, சுக்கு -
பலம்-1, நவச்சாரம் - பலம்-2, ஓமம் -
பலம்-1, எட்டிக் கொட்டை - பலம்-8 யிந்த மருந்துகளுக்கு
பாதி காட்டுக் கருணைக்கிழங்கு சேர்

கூட்டி காயப் போட்டு இடித்து சூரணம் செய்து கொண்டு இதற்கு பழவெல்லம் பலம்-25 சட்டியில் போட்டு கரைத்து அடிகட்டி காய்ச்சி பக்குவத்திலிறக்கி ஆற வைத்து சூரணத்தை கொட்டிக் கிளறி தான்றிக்காய் போலே மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு மாத்திரை பொடி செய்து தேனிலாவது சர்க்கரையிலாவது கொடுத்து வரவும். இப்படி கால் மண்டலம் கொள்ள உள்மூலம், புறமூலம் யிவைகள் தீரும். உப்பு, புளிப்பு தவிரவும். தவிர்க்க.

மூலய ரத்தத்துக்கு தான்றிக்காய் மாத்திரை

சுக்கு, திப்பிலி, மிளகு, தாளிசபத்திரி, மிளகரணைப்பட்டை, புளியம்வறடு சுட்ட-சாம்பல், கொடிவேலி வேர், சீரகம், ஏலம், லவங்கம், லவங்கப்பத்திரி, கண்டங்கத்திரி-வேர் வகைக்கு பலம்-1 கொண்டு வந்திடித்து சூரணம் செய்து கொண்டு யிந்தச் சூரணம் பங்கு ஒன்றுக்கு வெல்லம் பங்கு அஞ்சு கொண்டு வந்து தண்ணீரில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சி பக்குவத்திலிறக்கி ஆறி வரும் போது சூரணத்தைக் கொட்டிக் கிளறி தான்றிக்காய் போலே மாத்திரை திரட்டி

வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கொரு மாத்திரை தேனில் கொடுக்க
வர தீரும் வியாதி — சுவாசகாசம் . க்ஷயம் .
- இருமல், பீனிசம் ஆகிய நோய்கள் தீரும்
தொடர்ச்சி இல்லை.

81-வது ஏடுக்குப் பிறகு 95-வது
ஏடுதான் உள்ளது.

95. ..சுவாசகாசத்தே விழிக் காசிடை காசம்
பொருத்து பனிநீரின் அத்துடன் பனைவிடை
..பீனசு.. வாய்ந்டதின் கைகாணென்
கூறுகின்ற வகைக்கு இடம் பிரட்டு,
வயத்தின் வலி இன்னும் மகோதரமுடன்
பெருவயிறு, கற்கோர்வை, நவப்பானை,
கிரிணை, அக்கினை, கொப்பூழ்ணை, அவர்-
காமாலை, பீனச ஒருபாகம், செந்தேனிட
சித்திக்கண்ணைந் தேரடுமே.

நீரிழிவுக்கு ஆதி பத்திர உருண்டை,

எருமை வெண்ணெயை புதுச் சட்டியி-
-லிட்டு அடுப்பில் வைத்து எரிக்கிற போது
ஆதிபத்திரி — வங்கக்கிண்டை —1 போட்டு பொன்னிற
மாக வறுத்து அரைத்து பதினெட்டு உருண்டை
செய்து வைத்துக் கொண்டு ஒரு உருண்டை
காலையே விழுங்கவும். காலமே பழஞ்சோறு

பிழிந்து போட்டு நல்லெண்ணெயை வார்த்து
காப்பாடு கொள்ளவும். நீர்ப்புருக்கு - இரு பக்க
மாம். சிறுகட்டைக்கிழங்கு அக்கரமாக
அரிந்து பசுவின்பாலை புடம் வைத்திட்டு
உலர்த்தி இரணம் தேனில் வெந்நீரிலிட்டு
தீரும்.

சித்திர காள வசகம் உருண்டை

சித்திர மூலம், பெருங்காயம், திரிகடுகு
வாய்விளங்கம், திப்பிலி மூலம், கண்டுதிப்பிலி
ரளம், வெளங்கம், நாககேசரம், அதிவிடையம்
செவியம், சித்திரசாரம், கார்கடகம், தாளிச-
-பத்திரி, அகத்தி விதை, சீரகச்சக்கரை,
திரிவேணை, முத்தக்காசு, சிறு நாயவேர்
தேவதாரம், இலங்கொட்டை யிவையெல்லாஞ்
சரியிடை - யாவுக்கு முன்றத்தனை சீ
சிவதை வேர்ப்பொடி, இதுக்கு இரண்டத்-
-தனை வெல்லம் பாகாய்க் காய்ச்சி இரணி
கலந்து தகுந்த பிரமாணம்
உருண்டை செய்து வைத்துக் கொண்டு
ஒரு உருண்டை கடுக்காய்ப் பொடியுடன்
வெந்நீரில் கொடுக்கத் தீரும் வியாதி-
குஷ்ட ரோகம், ஹ்ருதய ரோகம், காசம்
சுவாசம், காசம், சுரம், பாமியம், கிராணி
மூலவியாதி, பாண்டுவியாதி, வல்லைகள்
சில வியாதிகளும் தீரும். காரப்பு, புளிப்பு தள்ளவும்

வாத சுரத்துக்கு உருண்டை

இங்குலிகம் - ௧, அரிதாரம் - ௧, மனோ-சிலை - ௨, குருந்து கொல்லி - ௨, வெள்ளைப் பாஷாணம் - ௨, மாசிகம் - ப ௭, மிளகு - ..௩, வெர்க்கொம்பு - ௫, திப்பிலி - ..., சுக்கு - ௨ யிவையெல்லாம் முசுறு-

அ. முட்டைச் சாறு வார்த்து அரைத்து கொள்ளு பிரமாண மாத்திரை திரட்டி கொண்டு ஒரு மாத்திரை தேனிலிடவும். வாழைப்பழச் மக்சன் பொடியிலிடவும். பத்தியம் - கஞ்சி. சாத்திலிடவும்.

சுரத்துக்கு ஆனந்த வயிரவன் மகாசு

சாதிலிங்கம், கெந்தகம், நாபி, திப்பிலி, மாசிகம் யிவையெல்லாஞ் சரியெடை எலுமிச்சம்பழச் சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாண மாத்திரை திரட்டி கொண்டு தோஷசுரத்துக்கு சர்க்கரையிலொரு மாத்திரை யிடவும். வாத சுரத்துக்கு வெள்ளுள்ளிச் சாற்றிலிடவும். பத்தியங் கஞ்சி கொடுக்கவும்.

வாத சுரத்துக்கு வாதராக்ஷண உருண்டை

பாடல்

மிளகு அரை கடுக்கா யொன்று
மிக்க ஆமணக்கு நூறு
வளமிகு வாளம் பெறு
வரிநீலச் சாத்தி யரைத்து
உளமிகு பழத்தின் தேனி
ஆட்கொண்டதோர் குண்டை கொண்டு
அளவறு தீதம் போகும்
அகன்றிடும் நோய்க ளெல்லாம்.

சீதள வாய்வுக்கு நெய்

புங்கம் வேர்ப்பட்டை யிலை, காய், பூ, சமூலமும் பெய்த்தி வேர்ப்பட்டை யிலை காய் சமூலமும் பசுவின் சாணிப்பால் படி-1 வார்த்தரைத்து ஒரு பெரிய நாரத்தங்காய் அளவுக்கு ஒரு சட்டியிலிட்டு பசுவின்நெய் அரைப்படி விட்டுக் கரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு கரண்டி கொடுத்து வர வாதம் 84 வகையும் தீரும்.

முடக்கு வாதத்துக்கு நெய்.

பசுவின்நெய் - படி-1, புங்கம் வேர்ப்-பட்டை இரண்டு நாரத்தங்காயளவு அரைத்து நெய்யில் கரைத்துக் காய்ச்சி ~~[illegible]~~ பதத்தில் வடித்துக் கொண்டு இரண்டுவேளையும்

வேளைக்கொரு கரண்டி கொடுத்து வர
முடக்கு வாதந் தீரும். பத்தியம் - பசுவின் பாலும்
எருமைப் பாலும் சமன் கலந்து இட்டு வரவும்.

பித்த (பிரமை)க்கு நெய்

முசுமுசுக்கை சமூலந் துவைத்து இரு-
96 நாழிச் சாறு பிழிந்து கொண்டு
பசுவின் பால் இருநாழியும் பசுவின் நெய்
இருநாழியும் கூட வார்த்து இடித்துக் கற்கம் -
........, திப்பலி, [illegible], சர்க்கரை,
[illegible] இவைகள் வகைக்கு பலம் 2
யிவையெல்லாம் பசுவின் பால் வார்த்தரைத்து
கரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு
கரண்டி இருபது நாட்கள் கொடுக்க பித்த
பிரமையெல்லாந் தீரும்.

பித்தத்துக்கு நவாதி நெய்

பசுவின் நெய் இருநாழி சட்டியில் வார்த்து
இடித்துக் கற்கம் - ஏலம், சீரகம், நெல்லிப்பருப்பு
அதிமதுரம், கோஷ்டம், சென்பகமொக்கு
நாகப்பூ, சந்தனம், நன்னாரிவேர், விலாமிச்ச-
வேர், முசுமுசுக்கை வேர், பெருஞ்சீரகம்
யிவை வகைக்கு இருகழஞ்சி கூட்டி
யிடித்து பசுவின் பால் விட்டரைத்து

நெய்யுடன் கரைத்துக் காய்ச்சி மெழுகு
பதத்தில் இறக்கி ~~[illegible]~~ கொண்டு
யாந்த நெய் இதற்கு முன்னே பக்கணான்,
பசையானால் பார்த்து ரெண்டு வேளையும்
வேளைக்கொரு கரண்டி கொடுத்து வர
பித்த பிரமையோடு சேர்ந்த பித்தமாறு
வகையும் தீரும். இந்த நெய் தலைக்குத்
தேய்த்து முழுகி வரவும்.

மூலரோகம் ஆறுவகைக்கும் முள்ளம்-பன்றி நெய்.

ஒரு முள்ளம்பன்றி கொண்டு வந்து
மயிர், குடல் போக்கி அசுலம் நறுக்கி
பானையிலிட்டு மூன்றுபடி தண்ணீர் விட்டு
அரைப்படி சாறிருக்கக் காய்ச்சி வடிகட்டிக்
கொண்டு பசுவின் நெய் முக்கால் படி
கூட வார்த்து சுக்கு, மரமஞ்சள், அதி-
விடையம், புளிகரணைக்கிழங்கு, மருள்-
கிழங்கு, நாயுருவி வேர், காட்டாத்திப்பூ,
பிரண்டைக்கிழங்கு, கருவேப்பமர்க்கு,
முசுமுசுக்கை வேர், முருக்கம் வேர், காட்டுக்
கருணைக் கிழங்கு இவைகள் வகைக்கு
கழஞ்சு - இவை கூட்டி பசுவின் பால்
வார்த்தரைத்து கூட வார்த்துக் காய்ச்சி
மெழுகு பதத்தில் வடித்து ~~[illegible]~~ கொண்டு

இரண்டு வேளையும் வேளைக்கு கழஞ்சு
பிரமாணங் கொடுத்து வரத் தீரும் வியாதி -
குன்மரோகம் ஆறு வகையும் உடம்பு தினவு
சோபம், உடம்பு வெளுத்துப் போதல்
தலைநோக்காடு, முதுகுவலி, அக்கினி-
மந்தம், காது நட்டம், [illegible]
[illegible], கால் கை கடுப்பு, வயிற்றெரிவு
குளைவல் திருக்கிடுகிறது, சுரம், [illegible]
[illegible], உடம்பிளைப்பு, [illegible]
காத்துப் பாதல், விதாகம், வயறு பொருமல்,
அதிக நித்திரை, மலபந்தம், வயறு நோவு,
அ மலரத்தம், மல.... சலம் போலே
விழுகிறது, மூர்ச்சை, சீதம் வெளுத்துக்
காணுகிறது, மலம் கொழு போலே
விழுதல், பழமலமிருந்தாலும், குன்மமுண்-
-டாம், மனக்கிலேசமுண்டாம், பித்தி-
மயக்கம், கோபமுண்டாம், தினவு, அசதி,
புகைந்து இருமுதல், வயிற்றிரைச்சல், நெஞ்-
-சொக்காளம், மேல்மூச்சு, கை கால்
வீக்கம், வயறு கல்போலுதல் குத்தல்
யிப்படிப்பட்ட வியாதி யெல்லாந் தீரும்.

அஷ்டசாரத்திரிகு நெய்

இளநீர், கரும்புச்சாறு, நெல்லிக்காய்ச்-
-சாறு, நீர்ப்பூசணிக்காய்ச் சாறு, நெருஞ்சில்-
சாறு, மாதளம்பழச் சாறு, தாமரைக்கிழங்குச்சாறு

வல்லாரையிலைச் சாறு, [illegible]ட்டான் - கிழங்குச் சாறு, ஆடாதோடையிலைச் சாறு வாழைக்கிழங்குச் சாறு, வெள்ளாட்டுப்பால், பசுவின்நெய் யிவைகள் வகைக்கு படி-1 கிழங்கு கற்கம் - திப்பிலிப்பழம், பேரீச்சம் - பழம், கொத்தமல்லி, சீரகம், அதிமதுரம் லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், அக்கு, திப்பலி-பலம்-2, திப்பிலி மூலம் - பலம்-2, சித்திரமூலம், செவியம், வாய் - விளங்கம், சதகுப்பி, தக்கோலப் பொட்டு சொங்கழுநீர்க் கோஷ்டம், கருஞ்சீரகம் கண்டங்கத்திரிவேர், வெட்டிவேர், சிறுவேர் யிவைகள் வகைக்கு படி-1, [illegible] இதுகள் - யிவற்றை வெள்ளாட்டுப்பால் விட்டரைத்துக் கரைத்து விட வார்த்து காஞ்சி பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு இரண்டு வேளையும் நாற்பது நாட்கள் கொடுக்க - அஸ்தி சுரம், இருமல், பித்த - வாய்வு, அக்கினி மாந்தம், சுரம், அன்ன - திரேகஷம் யிவையெல்லாந் தீரும். அக்கினியுண்டாம். பலமுண்டாம்.

நவப்பிணிசத்துக்கு நெய்,

தேங்காய் நெய் - படி - ௨, பசுவின்நெய் - படி - ௨, அருகம்வேர்ச் சாறு படி - ௨, ஏலம்,

கோஷ்டம், வெண்காரமு மிவை வகைக்கு
வராகனிடை - 3. மெழுகு பதத்தில் வழித்து
தினைக்குத் தேய்த்து காதிலும் நாசியிலும்
விடலாம். சீயக்காய், சிறுபயறு மிவை
அரைத்து முழுகவும். நவபிணிகளுந் தீரும்.

புத்தியுண்டாகப் பிரமிய நெய்.

பெருகிய பிரமிச் சாறு
பிழிந்திரு நாழி கொண்டு
உருகிய நறுநெய் நாழி
யுடன்கலந் தூற்றிப் பின்னை
மருவிய மருள நெல்லி
வான்கடு கிவைதை வேர்க்கோ
பெருக்கிய திருவி னாளே
ஒருபலங் கொள்க வென்றே.

கொண்டபின் னிவற்றி னோடு
கொள்கையந் துப்பு விழாள்
கண்ட சக்கரை வசம்பு
கடுகவே யிடையெ டுத்து
97. மீண்டுமே யிவையோ டொன்று
விரைந்துமுக் கழஞ்ச ரைத்து
தண்டலிழ் முட்டந் . . . .
. . . . மென்றே.

உடுத்தபின் னொருநாள் நக்க
வாக்குநன் னாகுந் தீந்து
பிடித்துட னெழுநாள் நக்கப்
2 பாடல் கின்னம தாகும்

தொடுத்துநாள் வைத்து நக்கச்
சொன்னவை தரிக்க லாகுமே
அடுத்தொரு மாதம் நக்க
அருந்தமிழ்ப் பாட லாமே.

யீட்டுக்கு நெய்

உடுவடக்கியுங் கிழாநெல்லியுஞ் செவ்வாய்க் கிழமையன் காப்புக் கட்டி தூபதீபங் கொடுத்து அனேவரும் பிடுங்கி வந்து யிந்த இரண்டுவைத ~~[illegible]~~ யாடிய ~~உங்கள்~~ ஒருநாள் ~~[illegible]~~ நிழலில் உலர்த்தி [illegible] மெல்லிய துணியில் சின்ன பொட்டணங் கட்டி மூன்று நாளைக்கு யொணித்துவாரத்தி லூற-வைத்து யெடுத்து ஒரு சட்டியில் ~~[illegible]~~ நறுநெய் வார்த்து யிவையும் போட்டுப் பொரித்து நெய்யை யாறுத்து வைத்துக் கொண்டு தனக்கு வேண்டிய புருஷனுக்கு சோற்றிலாவது கறியிலாவது நெய்யாடவும் திரும்பான்.

பக்கசூலை அஜீர்ண குன்மத்துக்கு நெய்.

நாயுருவிவேர் நாலிடை யெடுத்து எட்டு மரக்கால் நீர்விட்டு இருநாழியாகக் காய்ச்சி வடித்து சித்திரமூலவேர், சிவதைவேர், பொன்முசுட்டை வேர், சிறுகாஞ்சொறி-வேர், புங்கம்பட்டை, அரசம்பட்டை, மருள்க்கிழங்கு, பிரண்டை, காட்டுக்-கருணை, கற்றாழைக்கிழங்கு, திரிகடுகு, நேர்வாளம், ஆயில்பட்டை, திரிபலை, சொக்கடுகு யிவை வகைக்கு வராகனிடை-ய சேர்த்து பசுவின்பால் விட்டரைத்து கியாழமிட் டீறுத்துக் கொண்டு நாழி பசுவின்-நெய்விட்டு சிறுக மூன்று நாட்கள் காய்ச்சி வடித்து காசிடை ~~[illegible]~~ காலையில் தர பக்க-சூலை அஜீர்ண குன்மம் தீரும். கையாட்சி.

சத்தி குன்மத்தின் இனம் அதுக்கு உடவணை நெய்.

சோறு செரிக்கும் போது வயிறு வலிக்கும், வாய் நாறும், மனமறுக்கும், சத்தி வரும். ~~[illegible]~~ ஆகாரங்கள் ஒட்டாது. துரும்பு தொண்டையடுத்தால் வெதினை மாறும், நெஞ்சு செரிக்கும். உடன் சத்தி வரும். ~~[illegible]~~ இதற்கு நெய் செய்யும் விபரம் - உடவணைவேர் - பலம் - 10, [illegible]

தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு திரிகடுகு, ஏலம், பெருங்காயம், வெள்ளுள்ளி, கிராம்பு, கெந்தகம், சீரகம், இந்துப்பு, அரத்தை, தேவதாரம், சிறுதேக்கு, கருஞ்சீரகம், வாலுளுவையரிசி, வெட்பாலையரிசி, வெண்காரம், ஜாதிக்காய் வகைக்கு-பலம்-1 அரைத்துக் கரைத்து நானாழி பசுவின் நெய் புகட்டி வடித்து நாளொன்றுக்கு வரவும் சுத்தி இன்மை, இருமல், இளைப்பு தீரும்.

சேத்தும இன்மைக்கு நெய்

...... பறந்தோல், தூதுவளை வேர், இம்பூறல் வேர், சங்கம் வேர், பெருமருந்து வேர், இருப்பைப் பட்டை, யாவைகள் வகைக்கு பலம்-6 நசுக்கி தண்ணீர் விட்டு நாலொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு இதில் கற்கடகசிங்கி, கச்சோலம், கம்பப்பாசின், மரமஞ்சள், அரத்தை, அக்கு, திப்பலி, கடுக்காய், ஜாதிக்காய், நிலவேம்பு, கோஷ்டம், அதிமதுரம், லவங்கப்பட்டை, சாதிக்காய், புளிநரளைக் கிழங்கு, வகைக்கு கழஞ்சு-6 அரைத்துக் கரைத்து ஒரு நாழி நெய் புகட்டி காய்ச்சி வடித்து நாளொன்றுக்கு சேத்தும இன்மை தீரும்.

இரத்த சுத்தி குன்மத்துக்கு நெய்

இலவம் வேர், இழனாம் வேர், முன்னை வேர், பாதிரி வேர், வாழை வேர், சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், அத்திக்காய், சிறுகீரை வேர், மணத்தக்காளி வேர், காட்டாத்திப்பூ, பொன்முசுட்டை வேர், நாகன் கொட்டை, விளாம்பழம் வகைக்கு - பலம் - 6 கொண்டு வந்து யேகத்துக்கு இடித்து தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி வடித்து அத்துடன் பசுவின் நெய் நாழி விட்டுப் புகட்டு திரிபலை, சுக்கு, தேவதாரம், அதிமதுரம், இந்துப்பு, பேரீச்சம்பழம், செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், வெள்ளிலோத்திரம் வகைக்கு நாலு கழஞ்சரைத்து கரைத்து எரித்து வடித்துக் கொண்டு சாப்பிடவும் இரத்த சுத்தி குன்மம் தீரும்.

எரி குன்மத்துக்கு நெய்.

அதின் குணம்.

உடம்பு அழுத்தும், கால் கை எரிக்கும், நெஞ்செரிக்கும், வயிற்றை எரிக்கும், ~~சந்தி வலிக்கும்~~ சுளை வலிக்கும், ஏப்பம் விடும், அசனம் தெரியாது. இதற்கு நெய் - தாமரை வளையம் - பலம் - 25 தண்ணீர் பதக்கு நீர் விட்டு குறுணியாகக்

~~காசுக்கட்டி~~ சூரக்குத்தி வடித்து இதில் ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம், சண்பகப்பூ, விலாமிச்சம் வேர், சந்தனம், நன்னாரிவேர், செந்தாமரை வேர், செங்கழுநீர்க்கிழங்கு, சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி, முசு-முசுக்கை வேர், பச்சிலை, கச்சோலம், உள்ளி, வசம்பு, சிறுதேக்கு, சீரகம், வெந்தயம் இவை வகைக்கு பலம்-7 இளநீர் விட்ட-ரைத்து பசுவின் நெய் நாழி விட்டெரித்து ~~நக்கவும்~~ நாக்குழல் நீர்குன்மம் தீரும்.

பெரும்பாட்டுக்கு நெய்

பசுவின்பால் - படி - 7, இளநீர்த்தண்ணீ- படி-வ, முசுமுசுக்கைச் சாறு படி-வ,

98\. இன்றை சட்டியில் வார்த்து ஒரு இனி அடுப்பில் வைத்து எரியபடம் வைத்தெடுத்து காய்ச்சி நீர் சுண்ட நாழி கூட வார்த்துக் ~~காய்ச்சும்~~ ~~போது~~ காய்ச்சும் பொழுது - ஏலம் - பலம்-1, திப்பிலி மூலம் - பலம்-1, திப்பிலி - பலம் - உ, கடுக்காய் பலம்-வ, நெல்லிப் பருப்பு - பலம்-1, தும்பராஷ்ட்ரகம் - அதிமதுரம் - பலம் - ஐ, தாதுவளை வேர் - பலம் 2, பலம் - ஐ, சுக்கு - பலம் - ஐ, சீரகம் - பலம் - ஐ இவை-யெல்லாவற்றையும் கொண்டு வந்திடித்துச் சூரணம் ~~[illegible]~~ செய்து பசுவின் ~~[illegible]~~ இளநீர் ~~[illegible]~~ வார்த்தரைத்து

கூட வார்த்துக் காய்ச்சி ~~[illegible]~~ (இறுத்து) பதனை பரிமை-
மாய் வரும் போது யிறக்கி நெல்லுக்குள்
புதைந்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி
வேளைக்கொரு கரண்டி கொடுத்து வரத்
தீரும் வியாதி - மேகம், இரத்தப்பிரமியம்
தீரும்.

பெரும்பாட்டுக்கு நெய்

பசுவின் பால் படி - ௭, நெல்லிக்காய்த்-
தண்ணீர் - உழக்கு இந்த இரண்டு வகையும்
சட்டியில் வார்த்து சிறிய படத்தில் வைத்து
ஒரு படிய விட்டு யெடுத்து அடுப்பில் வைத்துக்
காய்ச்சி நீர் சுண்ட வரும் போது பசுவின்-
நெய் நாழி கூட வார்த்துக் ~~[illegible]~~ (காய்ச்சும்) போது
~~[illegible]~~ (இடிக்க) கற்க மருந்து - சாதிக்காய் - ௨
சாதிபத்திரி - வராகனிடை - க௭, லவங்கம் -
வராகனிடை - ௫, கோரோசனை - வராக-
னிடை - உ௭, குங்குமப்பூ - வராகனிடை - 1
தேத்தான் கொட்டை - பலம் - க௭, சங்கம் -
வெர்ப்பட்டை - பலம் - உ, சித்தாமுட்டி -
பலம் - 5 யிவை யெல்லாம் கொண்டு வந்-
திடித்து சூரணம் ~~[illegible]~~ (பச்சையாக) நெல்லிக்காய்
தண்ணீர் வார்த்தரைத்து கூட வார்த்துக்
காய்ச்சி மெழுகு பதத்தி லிறக்கி ~~[illegible]~~
கொண்டு நெல்லுப் பானையில் புதைத்து

வைத்துக்கொண்டு அந்தி சந்தி வேளைக்-
-கொரு கரண்டி குடித்து வந்தீரும் வியாதி-
மேகம், இரத்தமேகம், பெரும்பாடு யிவை-
யென்னாந் தீரும்.

பெரும்பாட்டுக்கு நெய்

478-ம் பக்கத்திலுள்ள நெய்யும் இதுவும் ஒரே மாதிரி உள்ளன

பசுவின் பால் படி-ரு, ~~இ~~ளநீர்க்காய்த் தண்ணீர் படி-உ, முசுமுசுக்கைச் சாறு- படி-உ யிவைகளைச் சட்டியில் வார்த்து சூரிய படத்தி லொருநாள் வைத்தெடுத்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி நீர் அண்ட விட்டு பசுவின் நெய் நாழி கூட வார்த்துக் காய்ச்சும் போது ~~[illegible]~~ கற்க மருந்து - சீமம் - பலம்-1, திப்பிலி-பலம்-2, திப்பிலிமூலம்- பலம்-1, நெல்லிப்பருப்பு - பலம்-1, கடுக்காய்- பலம்-உ, அதிமதுரம் - பலம்-ரு, தும்பராஷ்ட- -கம் பலம்-ரு, தாதுவேளை-பலம்-2, அக்கி-பலம்-ரு யிவை யென்னாப் கொண்டு வந்திடித்து இரணம் ~~[illegible]~~ ரசித்து இளநீர்க்காய்த் தண்ணீர் விட்டரைத்துக் கூட வார்த்துக் காய்ச்சி ~~[illegible]~~ பதன-
அ. பரிமளமாய் வரும் போ திறக்கி நெய்யுக்- கின்னே புதைத்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி வேளைக்கொரு கரண்டி கொடுக்கவும் தீரும் வியாதி - மேகம், இரத்த- பித்தமேகம், பெரும்பாடு யிவையென்னாந் தீரும்.

481.

உள்காய்ச்சலுக்கு
~~உள்க்காய்ச்சலு~~க்கு நெய்

பசுவின் நெய் - படி - ௨, கொடிமாதளம் - பழம் - 1, எலுமிச்சம் பழம் - .... ~~[...]~~ சாறு பிழிந்து கொள்ளவும். துளசிச் சாறு - உழக்கு, சிறு துளசிச் சாறு - உழக்கு, ~~[...]~~ - கிரந்திச் சாறு - உழக்கு யிவற்றையும் கூட வார்த்துக் காய்ச்சும் போது ~~[...]~~ கற்க மருந்து - சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், லவங்கம், திப்பிலி, சுக்கு, மிளகு, சீரகம் யிவை வகைக்கு பலம் 1, வெங்காரம் - பணவிடை - 4, சர்க்கரை - பலம் - ௨ யிந்த மருந்துகளை யிடித்து சூரணம் ~~[...]~~ கூட்டி போட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு அந்தி சந்தி வேளைக்கு ஒரு கரண்டி கொடுத்து வரத் தீரும் வியாதி - ~~உள்க்~~ உட்காய்ச்சல், அஸ்தி சுரம், மாந்த சுரம், கழிச்சல், அக்கினி மாந்தம் யிவை தீரும். கவிச்சு, புளிப்பு ~~[...]~~ தவிர்க்க.

கபால சூலைக்கு தலைக்கு நெய்

பசுவின் நெய் - நாழி, எலுமிச்சம்பழச் - சாறு - நாழி, ~~[...]~~ பொன்னாங்கண்ணிச் சாறு - உரி, யிவற்றை சட்டியில் வார்த்து ~~[...]~~ கற்க மருந்து - வாய்விளங்கம், செங்கழுநீர்க் கோஷ்டம், சுக்கு, அஞ்சடம், துக்கம் யிவைகள் வகைக்கு பலம் - ௨, தேவதாரிச் சக்கை பலம் - 1,

கொந்தகம் - பலம் - 1, இந்துப்பு - வராகனிடை -
1, திப்பலி - வராகனிடை - 2, மிளகு - பலம் - 2,
வெள்ளுள்ளி - பலம் - 2 யிவைகளையெல்லாம்
கொண்டுவந்து இடித்து சூரணம் ~~[illegible]~~ செய்து கரிசாலை-
-கண்ணிச் சாறு வார்த்தரைத்து கரைத்து கூட
வார்த்து காய்ச்சி பதத்தில் வரும்போது
நெய்தன் கிழங்கு பலம் - 2 அரைத்துக் கூடப்
போட்டு காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்
கொண்டு இந்த நெய் மூன்று நாட்களுக்-
கொருக்கால் தலைக்குத் தேய்த்து முழுகி-
வரவும். கபால சூலை ரோகங்களுந் தீரும்.

வைத்திய இரைத்துக்கு தலைக்கு நெய்

பசுவின்நெய் நாழி, பசுவின் பால் - நாழி
எலுமிச்சம் பழச்சாறு - நாழி, பொன்னாங்-
கண்ணிச் சாறு - நாழி, சிறுகீரைச் சாறு - நாழி
யிவைகளையெல்லாம் கூட்டி சட்டியில் வார்த்து
99, காய்ச்சும் போது ~~[illegible]~~ இருக்கும் மருந்து - திருநாமப்-
பாளை வேர், பர்ப்பாடகம், சீந்தில் தண்டு
பாளை வள்ளைக்கு பலம் - 2 கொண்டுவந்-
தரைத்துக் கரைத்து கூட வார்த்துக் காய்ச்சி
பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு
~~[illegible]~~ நெய் மூன்று நாட்களுக் ~~[illegible]~~
தலைக்குத் தேய்த்து முழுகி வரவும்.
தலை மண்டை வெரண்டு பயித்தியம் திரிந்து
திரிகிறது தீரும்.

சுவாசத்துக்குக் கையாட்சி நெய்

நெய்-படி-1, ஆடாதோடைச்சாறு படி-1, பூவரசம் பட்டையாவது, காயாவது, பிஞ்சையாவது சாரம் படி-1, சுத்தி செய்த தாளகம் வராகனிடை-3, மிளகு, சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம், கடுகுரோகணி, கிராம்பு, சித்தரத்தை, அதிவிடையம், அக்கிரகாரம், கோஷ்டம், அதிமதுரம் வகைக்கு வராகனிடை-3, அபினி மருந்து-விராகனிடை-1 யாவற்றையும் கடைச்சரக்கெல்லாம் முன் சொன்ன சாரம் விட்டரைத்து நெய் கூடக் கலந்து மெழுகு பதத்தி லிறக்கிக் கொண்டு வேளைக்கு சிறுகரண்டி நெய் சாப்பிடவும். இப்படி-13 நாட்கள் சாப்பிடத் தீரும் வியாதி-சுவாசகாசம், உப்புசம், மந்தாரகாசம், ஈளை, இருமல், க்ஷயம் பிணியெல்லாந் தீரும். உப்பில்லாப் பத்தியம்-கைப்பு, புளிப்பு, துவர்ப்பு தவிர்க்கவும், கையாட்சி.

க்ஷயத்துக்கு இங்கிலேப்பு நெய்.

இங்கிலேப்பு - வராகனிடை-1, கஸ்தூரி மஞ்சள்-பலம்-வ, அமுக்கிரா கிழங்கு-பலம்-வ

யிவற்றை யிடித்து கோரோசனையுங் கூடப் போட்டு நெய்விட்டு ஸ்ரீயபுடத்தில் வைத்து நசியம் பண்ணவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும் .

பூசணிக்காய் நெய்

பூசணிக்காய்ச் சாறு முன்னாழி, பசுவின் நெய் - ஒன்றாழி யிவற்றை சட்டியில் வார்த்து யிடித்த கற்க மருந்து - கார்மொழி புண்டரீகம், முத்தக்காசு, பற்பாடகம், அரத்தை, சுக்கு, வசம்பு, சிறுதேக்கு, திப்பலி, புல்லரிசி திப்பலி மூலம், கொடிவேலி வேர், ஆனைத் திப்பலி. யிவை வகைக்கு பலம்-1 கொண்டு வந்து பூசணிக்காய்ச் சாறு வார்த்தரைத்து கரைத்து கூட விட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு சின்னக் கரண்டி நெய் குடித்துவரத் தீரும் வியாதி - விஷரோகம் சுரம், பித்தக்கிறுமை வறட்சி, மருந்தீடு யிவை யெல்லாந் தீரும்.

சப்பை வாய்வுக்கு நெய்

பசுவின் பால் - படி-2 இடித்த கற்கமருந்து பருத்திக் கொட்டை, சுக்கு, திப்பலி, மிளகு கடுகு, வெள்ளுள்ளி, வசம்பு, யிவை வகைக்கு
அ பலம்-1 கொண்டு வந்து பால் வார்த்தரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு மேனுக்குப் போட்டு பிடிப்பாக்க சப்பை வாய்வு தீரும்.

ரத்த குன்மத்துக்கு நெய்

தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, பாதிரி வேர்,
சிவந்தை வேர், காட்டாமணக்கு கிழங்கு,
வில்லுப் பதிரி வேர், தக்காளி வேர், நெல்-
குமிழம் வேர்ப்பட்டை, சிறுவழுதுணை வேர்,
வெள்ளைச் சிறுவழுதிலம் வேர், நெருஞ்சில் வேர்,
பேராமல்லி யிவை வகைக்கு பலம் - ௨
கொண்டு வந்து நறுக்கித் பானையில்
போட்டு ரெண்டு படி தண்ணீர் வார்த்து
அரைப்படி யாகக் காச்சி வடிகட்டிக்
கொண்டு இதனுடன் பசுவின் நெய் படி - ௧
பசுவின் பால் - படி - ௧ கூட வார்த்துக்
காச்சி பதத்தி லிறக்கி வைத்துக் கொண்டு
யாறின நெய்க்கு பாதி தேன் வார்த்துக்
கொண்டு ரெண்டு வேளையும் வேளைக்கு
உள்ளங்கை குழிகொண்ட பிரமாணந்
சாப்பாட்டு வரத் தீரும் வியாதி - இரத்த குன்மம்
பவனவாய்க் கருப்பு யிவை யெல்லாந் தீரும்.

கிராணிக்குப் புளியாரை நெய்.

புளியாரைச் சாறு, இஞ்சிச் சாறு, புங்கோரைச்
-சாறு, அமுக்கிறாச் சாறு யிவை வகைக்கு
சாறு படி - வ, பசுவின் பால் நாழி, பசுவின் -
நெய் நாழி யிவையெல்லாங் கூட வார்த்து
இதற்கு கற்க மருந்து - செவ்வியம், அருகம்பு,
சாதிக்காய், அதிவிடயம், வசம்பு, பெருங்காயம்
யிவை வகைக்குக் கழஞ்சு - 3 கொண்டு வந்து

பசுவின் பால் வார்த்தரைத்துக் கரைத்து கூட
வார்த்து காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்-
-கொரு கரண்டி நெய் குடித்துவர சர்வ-
கிராணியும் தீரும்.

மூல ரோகங்களுக்கு நெய்

நாயுருவி வேர்ப்பட்டை - பலம் - 100 கொண்டு-
வந்து நசுக்கித் அமுக்கி பெரிய பானையில்
போட்டு நாலுமரக்கால் தண்ணீர் வார்த்து
காய்ச்சி கஷாயம் நாலத்தொன்றாயருக்க
வடிகட்டிக் கொண்டு யதுவும் பசுவின்-
நெய் - படி - 1, வெள்ளாட்டு நெய் படி - 1
~~[illegible]~~ யிவற்றையும் கூட வார்த்து
~~[illegible]~~ இடித்த கற்க மருந்து - வேம்பத்திரியம்,
சித்திரமூலம், இந்துப்பு, காஞ்சொறிவேர்,
கண்டுபறங்கி, புங்கம் வேர்ப்பட்டை, கருங்-
100 காலிச் சக்கை, இலந்தைவேர், மருள் கிழங்கு,
புளிநரளைக் கிழங்கு. கருணைக் கிழங்கு
...... மஞ்சள், கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லிப்பருப்பு, கடுகு, வெள்ளைக் கடுகு,
யிவைகள் வகைக்கு பலம் - ௨ கொண்டு-
வந்திடித்து சூரணம் ~~பண்ணி~~ செய்து நெய்யில் கரைத்து
காய்ச்சி பதத்தில் வடித்து ~~[illegible]~~.
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு
கரண்டி குடித்துவர ~~[illegible]~~ சர்வ மூல ரோகங்களும் தீரும்.

பெரும்பாட்டுக்கு நெய்

நாவல்பட்டை, அத்திப்பட்டை, கருங்காலிப்-
-பட்டை, தென்னம்பாளை, வாழைக்கிழங்கு, ரோஜாமொட்டு, சிற்றாமுட்டி, இறிஞ்சிக்கோவை, உத்தாமணிவேர், பேய்ப்புடல் இவைகள் வகைக்கு பலம்-10 கொண்டுவந்து நருக்கித் தெறித்து பெரியபானையில் போட்டு பத்னாறு படி தண்ணீர் வார்த்து அடுப்பின் வைத்து மெதுவாய் அந்த நாள் காய்ச்சி கஷாயம் ரெண்டுபடி யாருக்க வடிகட்டிக் கொண்டு பசுவின்நெய் படி-2, பசுவின்-பால் படி-2 இவற்றையும் கூட வார்த்து கற்க மருந்து- அகில்பட்டை, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சீரகத்தை, திப்பிலி, சந்தனம் இவைகளுக்கு பலம்-1 கொண்டுவந்திடித்துச் சூரணம் செய்து நெய்யுடன் கொட்டிக் கிளறி மெதுவாய் ரெண்டுநாட்கள் காய்ச்சிவிட்டு நாள் காய்ச்சி கெட்டி பக்குவத்தில் இறக்கி வைத்துக் கொண்டு உள்ளங்கைக்கு இது கொண்ட பிரமாணம் குடித்து வரத் தீரும் வியாதி - பெரும்பாடு, இரத்தப்பத்திரம், இரத்தப் பிரமேகம், யோனியில் பிறக்கின்ற வியாதியெல்லாந் தீரும்.

பெரும்பாட்டுக்கு நெய்

வாழைக்கிழங்கு, அத்திப்பட்டை, மருதம்பட்டை, புளியம்பட்டை, வட்டத்திருப்பி, வில்வம்பட்டை, கடம்பம்பட்டை, இலந்தைப்பட்டை, ஆவாரம்பட்டை, உகாம்பிஞ்சு, மாதுளம்பிஞ்சு, ஆவாரம்பிஞ்சு, முத்தக்காசு, கொட்டிக்கிழங்கு, விளாம்பிஞ்சு இவை வகைக்கு பலம்-6, தென்னம்பாளை, நன்னாரி, ஆரிணைத்தாமரை, இருக்கிரைவேர், பொன்னாங்கண்ணி வேர், நெய்தல் கிழங்கு, குறுவேர் திண்டு, கிளிவந்திப்பட்டை, தாமரை வளையம் இவை வகைக்கு பலம்-3, தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, ஆலம்பட்டை, அரசம்பட்டை, கொழுக்கட்டைப்பட்டை, நாவல்பட்டை இவை வகைக்கு பலம்-2 இவையெல்லாம் கொண்டுவந்து நருக்கி பானையில் போட்டு முப்பத்திரண்டுபடி தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து மெதுவாய் மூன்று நாட்கள் காய்ச்சி கஷாயம் நாலொன்றா யிருக்க வடிகட்டிக் கொண்டு இதில் பசுவின்நெய் குறுணி, வாழைக்கிழங்குச்சாறு படி-2, வாழைப்பூ-5 கொண்டுவந்து கீறி யாரப்போலே ஆய்ந்து

இந்தச் சாத்திர் லோட்டுக் காச்சித் தைலயம்
நாலதொண்ணூறாயிருக்க வடிகட்டி ~~[illegible]~~
பிள்ளைகளுக்கும் கூட வார்த்து பிறக்கி
காற்க மருந்து — கொடிவேலைப்பாலை, அதி-
விடையம், அருகம்பூ, பெருமரப்பட்டை,
திவதாட்டிப்பழம், பேரிச்சம்பழம், சொக்கு-
-நீர்க் கோஷ்டம், கப்பிர கோஷ்டம், அதி-
-மதுரம், வாய்விளங்கம், நாவல்பூ, சாதிக்காய்
லவங்கம், ஏலம், வெட்ட திருப்பா வேர்
பாந்துப்பு, பில்வம்பிசின், சீரகம், விளாம்-
-பிசின், மாதளம்பிஞ்சு, முத்தக்காசு,
கொட்டிக்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு,
ஓரன்சண்டி பிள்ளைகள் வகைக்கு
விராகனிடை-1 கொண்டுவந்து அரைத்து
கூடப்போட்டிருக்கும் தயிர்மேல் நீர்
நானாழியும் தயிர் பொருநாழியுமாகக்
கூட வார்த்துக் காச்சி பதத்தி லிறக்கி
வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும்
வேளைக்கொரு கரண்டி குடுத்துவரத்
தீரும் - ~~[illegible]~~ பெரும்பாடு, ரெத்தப்பக்கிரிடி
ரெத்த பிரமேகம், ஜெட்டின காமாலை
பிள்ளை யெல்லாந் தீரும். பத்தியம் -
உப்பு, புளிப்பு, தவிரவும்.

15/5/98

இக்கையேடு, மெய்ப்புகளை சரிபார்த்து, பக்கங்களை
செப்பத்துடன் அச்சுக்கு கொடுக்கலாம்.

[illegible]

நெறியாளர்.